பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 25-2-40 பிரமாதிஹூ மாசிமீ 13உ	முத்து 16

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
ராம்கார் காங்கிரஸ்	... ...	438
போகிற போக்கில்	... ...	440
உலக வர்த்தமானம்	... ...	443
உதிர்ந்த மணிகள்	... ...	444
அதிகப் பிரசங்கம்	... ... "அதிகப்பிரஸங்கி"	445
ஏ-மாற்றல்	... டி. எஸ். ராமாநுஜம் எம். ஏ., எல். எல். பி.	446
வேண்தாமரை	... ... "காங்கேயன்"	449
பாக்கியசாலி	... ... பண்டிதை வி. பாலாம்பாள்	453
இரு தெய்வங்கள்	... ... ஜயலக்ஷ்மி	454
சிறுவர் பகுதி	... ... ரா. வெ. ரா.	458

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

ராம்கார் காங்கிரஸ்

மௌலானா அபுல்கலாம் ஆஸாத், சமீபத்தில் ராம்காரில் நடைபெறப்போகும் காங்கிரஸின் தலைவராக தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டதே நம்முடைய முதல் வெற்றி. அவர்தான் இந்த வருஷம் காங்கிரஸிற்கு, இந்த நெருக்கடியில் தலைமை வகிக்க வேண்டுமென்று முன்தீர்மானம் செய்ததும் உத்தமம். அந்த தீர்மானத்தை ஒத்துக்கொண்டு, இந்த வகுப்புவாதக் குழப்பத்தில் தைர்யமாக நின்று தேச சேவை செய்ய மௌலானா ஆஸாத் தீர்மானம் செய்தது இதைவிட உத்தமம். இந்த முதல் வெற்றியை ஏணியின் முதற்படியாக வைத்துக்கொண்டு ஹிந்து-முஸ்லிம் ஐக்கிய பாவத்தில் தேச முன்னேற்றத்திற்கு நாம் பாடுபட வேண்டும். இந்த யுத்த சமயத்தில் அரசியல் பொருளாதார விஷயங்களில் ஆகவேண்டிய சட்ட திட்டங்களையும், தீர்மானங்களையும் வரும் ராம்கார் காங்கிரஸில் நாம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

ஹிந்து-முஸ்லிம் ஐக்கியம்

இந்திய நாகரீகத்தின் முக்கிய லட்சியம் வேற்றுமையை அழித்து ஒற்றுமைபடுத்துவதுதான். இந்த நாகரிகத்தின் மேன்மை இந்த உத்தமமான ஜீரண சக்திதான். இதுதான் நமக்கு அழியாத ஜீவதாது. சில நூற்றாண்டுகளாக இந்த சக்தி நமக்கு குறைவுபட்டுக்கொண்டிருப்பதால், அன்பும் பலமும் குறைந்து, வேற்றுமையும் அதன் விகாரங்களும் அதிகரித்து வருகின்றன.

பாபர் சக்ரவர்த்தி டில்லியில் சிம்மாசனம் ஏறியவுடன், ஒரு வடத்தில் இழுக்கப்பட்டு ஓடிய இந்திய அரசியல் தேர் இரண்டு வடங்களை அடைந்தன. இதை ஒன்று சேர்த்து திரிக்க முடியாவிட்டாலும், ஒத்து இழுத்தால் காரியம் கைகூடுமே! இது இல்லாமற்போனதால் அரசியலில் பலவித கேடுகள் நமக்கு நேர்ந்திருக்கின்றன. அடிமைத்தனம் நேர்ந்தது. அரசியலில் ஹிந்து-முஸ்லிம் வேற்றுமையை அழித்து, ஒற்றுமையை உண்டாக்கி, தேசம் முன்னேற்றம் அடையும்படி செய்ய வேண்டும் என்பதுதான் இந்திய சரித்திரத்தின் மனோபாவம்; 300 வருஷத்திய கருத்து; மேன்மையான இயக்கம்.

இந்த ஒற்றுமை ஆனந்தத்தை முதல் முதல் உருவமாக்கிக் கொண்டாடினவர் அக்பர் சக்ரவர்த்தி. அஸ்திவாரம் போட்டவரும் அவரே. ஆனால் இந்தப் பெரிய காரியம் பிற்காலத்தில் இது வரையில் நிறைவேறவில்லை. மகாத்மா காந்தி இந்த துறையில் இருபது வருஷ காலமாக தொண்டு செய்து வருவது வீண் போகாது என்று நம்புகிறோம். அக்பர் போட்ட அஸ்திவாரம் இன்னும் அழியவில்லை. ஷாஜஹானுக்குப் பிறகு அவர் முதல் புதல்வர் டேரா சிம்மாசனம் ஏறியிருந்தால், தாஜ் மகாலைப்போல், அக்பர் போட்டிருந்த அஸ்திவாரத்தின் மேல், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையென்ற என் நாளும் அழியாத ஒரு தாஜ்மஹால் கட்டப்பட்டிருக்கும். இந்திய நாகரீகத்திற்கே அது ஒரு சிலாசாசனமாய் இருக்கும்; ஐயமில்லை. ஈசன் எண்ணத்தில் நமது நாடு, அப்பொழுது இந்த அருளைப் பெற பரிபக்குவ மடையவில்லை என்றுதான் நாம் சமாதானம் செய்துகொண்டு, மறுபடியும் இப்பொழுது விடாமுயற்சியுடன் தொண்டு புரிய வேண்டும்.

ஜனுப் ஜின்னு பேரில் நாம் கோபமடைவதில் பயனில்லை. அவர் செய்வது நம்மை நமது தூக்கத்திலிருந்து எழுப்பும் தொண்டுதான். தியாகமும், சேவையும் போதாது என்று காட்டுகிறது.

தனித் தொகுதி

ஆனுல் இப்பொழுது இரண்டு மூன்று வருஷ காலமாய் காணப்படும் வகுப்புவாதத்தின் கடுமையும், வேற்றுமையும் பகையும், இவ்வளவு தூரம் நமது சரித்திரத்தில் ஒருக்காலும் பரவவில்லை. மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தில் முஸ்லிம்கள் ஏராளமாய் ஹிந்து ராணுவத்தில் சேர்ந்து யுத்தம் புரிந்தார்கள். மூன்ருவது பானிப்பட்டு யுத்தத்தில் பேஷ்வா தரப்பில் ஓர் முக்கிய ராணுவ அதிகாரி இப்ராஹிம் லோடி. பீரங்கி படை அவர் கையிலிருந்தது. அப்படியே ஔரங்கசீப்பின் சைன்யத்தில் பல ஹிந்துக்களும், ராஜ புத்திரர்களும், உயர்ந்த பதவிகளை வகித்து தங்கள் கடமைக்கு விரோதமன்னியில் நடந்து வந்தார்கள். இருவரும், அல்ப புத்தியில்லாமல் யுத்தங்களை 'கிரிக்கட்' விளையாட்டுபோல் அதன் சட்டதிட்டங்களை யனுசரித்து நடத்தி வந்தார்கள்.

ஆனுல் இப்பொழுது அரசியலில் நடக்கும் வகுப்பு வாதங்கள் எல்லையில்லாமல் தலையோங்கி நமது வாழ்வையே அழித்துவிடும்போல் தோன்றுகிறது. பகை முற்றி வருகிறது. அரசியல் போரில் நல்ல வித்து முளைத்து பயிராவது கஷ்டம். விழல் மண்டுவது இயல்பு. அரசியலில் ஐக்கிய பாவம் ஒழிந்து பிளவு அதிகரித்தால் தேசமுன்னேற்றமேது?

இவ்வளவு பகைக்கும் காரணபூதமாயிருக்கிறது தனித் தொகுதிதான். இதுதான் கரையை யழித்த மோட்டை நட்டை. இதுதான் 1906-ல் பிரிட்டிஷ் சர்க்கார் தொட்டிலிலிருந்து பிறந்து வளர்ந்த அசுரக் குழந்தை. தனித் தொகுதி பிறந்த நாள் முதற்கொண்டு மித்திர பேதம் செய்துகொண்டே வருகிறது. இந்த நரகாசுரனை, நாம் ஒன்று சேர்ந்து ஒழித்தாலொழிய நமது நாட்டிற்கு முன்னேற்றமே கிடையாது. மௌலானு அபுல் கலாம் ஆஸாத் தலைமை வகிக்கும் காங்கிரஸில்தான் இந்த நரகாசுரனை வதம் செய்யவேண்டும்.

ஜனுப் ஜின்னு

தலைவர் தேர்தலில் ஸ்ரீ எம். என். ராய் போட்டியாக நின்றதும் ஒரு காரியத்திற்கு நமக்கு சௌகரியம்தான். காற்றுடிவிட்டால் காற்றின் வேகம் நமக்குத் தெரியுமல்லவா? இந்தத் தேர்தலினுல் ஒன்று நிச்சயம் தெரிகிறது. நமது நாட்டில் குணமும், சேவையும், சுயநலமற்ற தன்மையுமிருந்தால் மதத்தின் பேதத்தை ஒருவரும் அரசியலில் கவனிப்பதில்லை.

அரசியல் வாழ்க்கையில் மதத்தை பொருட்படுத்தியவர்களாய் ஹிந்துக்களிருந்தால் 6 கோடி முஸ்லிம்களாக இந்தியாவில் தன் மதத்தை விட்டு மாறி அன்னிய மதம் சேர்ந்து விருத்தியம்சம் ஆகும்படி பார்த்திருக்க மாட்டார்களே. சென்னை ராஜதானியில், பழைய டில்லி சட்ட சபைக்கு, விடாமல் 12 வருஷகாலம் ஹிந்துக்களெல்லாம் ஒன்று சேர்ந்து நவாப் சயீத் மகமதை தேர்தலில் முதல் ஸ்தானம் வகிக்கும்படி தேர்ந்தெடுத்து அனுப்பவில்லையா? ஜனுப் ஜின்னுவும் நம்முடன் கூடி கரகோஷமிட்ட தொண்டர்களில் ஒருவர் தானே. இப்பொழுது 'தான்' என்னும் அகங்காரத்தினுலும், சொப்ன அவஸ்தையினுலும், இந்திய நாகரீகத்தின் மேன்மையையும் அமைப்பையும் அழித்து பிளவுகள் செய்யப் பார்க்கிருர். —வழி தப்பின யானைபோல்.

மௌலானுவின் வெற்றியால் இந்த வீண் கிளர்ச்சி தடைபட வேண்டும். இதற்கு ஒரேஒரு வழிதான்.

அரசியல் நிர்ணய சபை

வைஸ்ராயும் காந்திஜியும் சந்தித்து, சமாதானத்திற்குவந்து, சமரசமாய் இந்த அரசியல் நிர்ணய சபை நடக்குமென்று எண்ணினேம். ஏனென்ருல், உண்மை

(444-ம் பக்கம் பார்க்க)

போகிற போக்கில்



‘எக்ஸ்கர்ஷன்’ ரயில் காக்ஷியையும் குழந்தைகள் ரயிலில் காபி குடிக்கும் மகிமையையும் கண்டு மகிழ்ந்து, ரயில் தப்பும் நெருக்கடியில் அகப்பட்டுக்கொண்டேன். அதிலிருந்து என்னைக் காப்பாற்றின சாஸ்திரிகளுக்கு என் மனமார்ந்த வந்தனத்தை மல்லியம் ஸ்டேஷன் வரும் வரையில் சுருக்கமாய் தெரிவித்துக் கொண்டேன். சாஸ்திரிகளோ என் வார்த்தைகளை கொஞ்சம்கூட லக்ஷியம் செய்யவில்லை. அவர் கண்கள் அங்குமிங்கும் வண்டுபோல் பறந்து உலாவிக் கொண்டிருந்தன. கூட வரும் பிரயாணிகளை இடுப்பிலிருந்து மூக்கு வரையில் சோதனை செய்வதுபோல் தோன்றிற்று. நான் கொஞ்சம் ஊகித்து ஊக்கத்துடன் அவரை நோக்கிக் கேட்டேன்: “என்ன சாஸ்திரிகளே, கொஞ்சம் பொடிபோடும் பழக்கம் கூட உண்டோ?”

“ஆமாம், அதை நீங்கள் எப்படி கண்டுபிடித்தீர்கள்? அதிக கூர்மைதான்! ‘எக்ஸ்கர்ஷன்’ ரயில் அமளியில் ‘ரிப்ரஷ் மென்ட்ரூமி’ல் என் பொடி டப்பியை—நல்ல டப்பி, ஏழு வருஷம் என்னிடம் உழைத்தது — வைத்துவிட்டு மறந்து விட்டேன். உங்களிடம் கூட சொல்லி அதை எடுத்துவரச் சொல்லலாமோ வென்று நினைத்தேன். ஆனால் அதற்குள் ரயில் ஊதிவிட்டது. நீங்கள் வந்து சேர்ந்தால் போதுமென்று ஆய் விட்டது.”

“என்ன, சாஸ்திரிகள், பொடிபோடும் வழக்கம்கூட இன்னும் நம்ப ஜில்லாவில் இருக்கிறதா. அதற்குப் புகையிலை எது? எல்லாம் வாயில் போடும் புகையிலையாய் போய்விட்டது என்றல்லவோ இதுவரையில் நினைத்து வருகிறேன்”

“ஆமாம், சார், எனக்கு இந்த இரண்டு துரப்பியாசங்கள்கூட இருந்து வந்தது. நல்ல வேளையில் வாய் புகையிலையை விட்டுவிட்டேன். சிறு வயதில் நன்றாய் அத்யயனம் செய்திருக்கிறேன். பிறகு திருவையாரில் சம்ஸ்கிருத காலேஜில் சேர்ந்து படித்து சிரோமணி பரிக்ஷையில் முதலில் பாஸ் செய்திருக்கிறேன். முதலில் பாஸ் செய்யவேணுமென்ற எண்ணத்தைக்கொண்டே ‘ஜரூராய்’ ராப்பகல் படித்தேன். அப்பொழுது இரவில் கண்முழிக்க ‘டீ’ கிடையாது. பொடிபோட ஆரம்பித்தேன். சிரோமணி பரிக்ஷை என்னை விட்டுவிட்டது. ஆனால் பொடி இன்னும் விடவில்லை. முதலில் பாஸ் பண்ணினதின் பயன் நல்ல இடத்தில் கலியாணம் நடந்தது. திருவையாறே வேட்டாம். சீமந்தத்துக்குள் புகையிலைப் பழக்கமும் உண்டாய்விட்டது. இப்பொழுது நான் திருவையாரிலே சிரோமணி பட்டத்தை வகித்து சும்மாயிருக்கிறேன்—சில வக்கீல்கள்போல். தங்களுக்கு எந்த ஊரோ, என்ன வேலையோ?”

“ஆனால், சாஸ்திரிகளே, இப்பொழுது புகையிலை இல்லை போயிருக்கிறதே. பல்தாவள்யமாய் வெங்காய பஜ்ஜிக்கு லாயக்காயிருக்கிறதே!”

“அய்யர்வாள் பரிகாசம் செய்யவேண்டாம். கெட்ட பழக்கங்கள் தான் அறியாத வயதில் தெரியாமல், கட்டுப்பாடில்

லாத நவீன நாகரீகத்தில் ஏற்பட்டுவிடு கிறது. ஆனால் அவைகளை நான் ஒன்று ஒன்றாக விட்டு விட்டுக்கொண்டு வருகி றேன். இப்பொழுது திருவிடமருதூரில் பெரியவாளைப் பார்க்கப் போகிறேன். —ஒரு தடவை பொடியை போட்டு விட்டு, முழு ஆனந்தத்தையும், சுவானு பவப்படுத்திவிட்டு, மத்யார்ஜுனக் கா வேரியிலே—இன்றையதினம் புண்ணிய காலம், குருபுஷ்யம்-ஸ்நானம் செய்து விட்டு இந்தப் பொடியையும் புகையிலை யைப்போல் விட்டுவிடப் போகிறேன்."

"பெரியவாள், யார் தெரியவில்லையே? நீங்கள் திருவிடமருதூரா போகிறீர்கள்? அங்கேயே நானும் வருகிறேன். புகை யிலையை எப்படி விட்டுவிட்டீர்கள்—ரொம்ப சிரமசாத்தியமான காரியமே. கதையைச் சொல்லுங்கள், ரயில் ஆயாச மாவது தீரட்டும்."

"சிரம சாத்தியம்தான். கிருகஸ்தா சிரமத்தைக்கூட விட்டுவிடலாம்; சந்நியா சியாய் விடலாம்; புகையிலையை விடுவது மிக்க சிரமம். ஆனால் பெரியவாளுடைய அனுக்ரஹத்தினால் விட முடிந்தது. மூன்று மாதத்திற்கு முந்தி பெரியவாளை தரிசனம் செய்யப் போனேன். அகப்பட் டுக்கொண்டுவிட்டேன். சுவரக்ஞானத் துடன் அத்யயனம் நான் செய்திருக் கிறேன். சம்ஸ்கிருத படிப்பு கொஞ்சமா னாலும் கவிதையில் ருசியுண்டு. கொஞ் சம் சாரீரமுண்டு—"

இது உண்மைதான். சாஸ்திரிகளுக்கு கம்பீரமான அழகிய குரல். இல்லாவிட் டால் எனக்கு ரயில் தப்பிப் போய்விட் டிருக்கும். இந்த சம்பாஷணை நேர்ந் திராது.

"என்ன, ஐயர்வாள், ஏதோ ஆலோ சனை செய்வதுபோலிருக்கிறதே. ரயிலில் பாடக்கூடாது? சமயம் நேர்ந்தால் தங்க ளுக்கு ஸம்ஸ்கிருத சுலோகத்தை கொஞ் சம் பாடிக் காட்டவேண்டுமென்று எனக்கு அவா ஏற்பட்டிருக்கிறது. ஆங் கிலம் தெரிந்தவர்களுக்கல்லவோ நமது பாஷையின் மேன்மையை புலன்படுத்த வேண்டும்." என்று ஆரம்பித்தார் சாஸ் திரிகள்.

"அப்படியே ஆகட்டும், சாஸ்திரிகாள் ஆரம்பித்த கதையை முடியும்." என் றேன்.

"எனக்கு கொஞ்சம் சாரீரமுண் டென்று சொன்னேன். பெரியவாள் பெரிய ரசிகர். கானத்தில் மிக்க ரசிகர் நாதபிரும்மத்தில் லயித்தவர். அவரிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டேனென்று சொன்னேன். அந்த சமயத்தில் என் னைப் பெரியவாள் 10 மணி நேரம் தன் னுடன் இடை விடாமல் கூடவே வைத் துக்கொண்டுவிட்டார்.—பகல் 3 மணி முதல் இரவு ஒரு மணி வரையில்கூட வைத்துக்கொண்டுவிட்டார். உத்திரவு ஆகவில்லை. சம்ஸ்கிருத விசாரணையில், பெரியவாள் சன்னிதானத்தில் காலஹர ணம் தெரியாமல் மெய்மறந்து நின்றேன். புகையிலையும், வெற்றிலையும், சுண்ணாம் பும் பறந்து ஓடிப்போய்விட்டது. மறு நாள் வித்வத்சபையில் ஓர் ஸ்பெஷல் துப்பட்டாவும் எனக்கு வெகுமானம் கிடைத்தது. புகையிலையையே மறந்து விட்டேன். பெரியவாள் அனுக்ரஹத்தில் இந்தப் பொடி பட்டையும் போக வேணும்."

சாஸ்திரிகள் வணக்கத்துடன் வேண் டிக்கொண்டார்.

"சாஸ்திரிகள், காபியும் போகவேணு மென்று என்னையும் சேர்த்து வேண்டிக் கொள்ளுங்களேன்—மறுபடியும் பெரிய வாளை சந்திக்கும்பொழுது. அந்தப் பெரியவாள் யார்? நானும் அவர்களைப் பார்த்து வந்தனம் செய்துகொள்ளலா மென்று நினைக்கிறேன்" என்று நானும் கலந்துகொண்டேன்.

"அவசியம் நீங்களும் வரவேண்டும். உங்களைப்போலொத்த ஆங்கிலம் படித்த வர்கள்தான் அவாளைப் பார்க்கவேண்டும். உங்கள் சிகையைப் பார்க்கவே பிரியப் படுவார். இந்த நாளில் அது அபூர்வ மாய்ப் போய்விட்டதே. ஆனால் காபி போக வேணுமென்று பிரார்த்திப்பது

எனக்குக் கொஞ்சம் சிரம சாத்யமான விஷயம். வீட்டில் நெருக்கடி ஏற்பட்டு விடும். நான் விட்டுவிட்டாலும் ஆத்தில் விடுவது கஷ்டம். வீட்டில் இரண்டு பசு மாடு கறக்கிறது. வெரும் பாலை கலிகாலத்தில் யார் சாப்பிடுவார்கள்!'

"சாஸ்திரிகளே, காசி போகட்டும். இப்பொழுது இந்தப் பெரியவாள் எங்கே இருக்கிறார்? இன்றைய தினம் பார்க்கலாமா? அவாள் யார்?"

"பார்க்கலாம். அவாள்தான் நம்முடைய குரு. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகள்—சந்திரசேகர சரஸ்வதி. தைபுஷ்யத்தில் திருவிட மருதூர் காவேரியில் ஸ்நானம் செய்துவிட்டு தை அமாவாசைக்கு காவேரிப்பூம் பட்டினத்திற்கு சங்கமுக ஸ்நானத்திற்கு போகப்போகிறோம். நானும் காவேரிப்பூம்பட்டிணம் போனாலும் போவேன். தங்களுக்கு எந்த ஊர்? பட்டணமா? வக்கீல் வேலையா அல்லது உபாத்தியாயரா?"

"ஜகத்குரு காமகோடி சங்கராசாரியார் காவேரிப்பூம்பட்டிணம் தை அமாவாசைக்கு தானே வருகிறார்களா! என்ன ஆச்சரியம்! நான் அவாளை என் ஊருக்கு அழைக்க அல்லவோ நினைத்துக் கிளம்பினேன். ஸ்வப்னமோ, தரிசனமோ! அதனால் அல்லவோ தூண்டப்பட்டேன்.'

வியந்து மெய்மறந்து ஓடும் அழகிய தென்னந்தோட்டம், வாழைத்தோட்டத்தைப் பார்த்தும் பாராமல் இருந்தேன்.

"என்ன, அய்யர்வாளுக்கு கண்முழிப்பால் தூக்கமா? திருவிடமருதூர் வந்துவிட்டதே" என்று சாஸ்திரியார் தன்னுடைய கம்பீரமான குரலில் கூவி என்னை எழுப்பினார். இரண்டுபேரும் கீழே இறங்கினோம்.

டிபுடி தாசில்தாருடைய டவாலி போட்ட பியூன் என் படுக்கையையும் பெட்டியையும் தூக்கியதைக் கண்டு சாஸ்திரிகள் நெருங்கிய சிநேகம் பாராட்டி வணக்கத்துடன் என்னுடன் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டார். நான் பல யோசனையில் ஆழ்ந்து மெய் மறந்தேன். சிரோமணி சாஸ்திரியாரும் தனக்குக்கிடைத்த எதிர்பாராத வாகன லாபத்தில் சிட்டைப் பொடியையும் மறந்தார்.

மயிலாப்பூர்
21-2-40

மணி

உலக வர்த்தமானம்

சுமார் 340 பிரிட்டிஷ் கைதிகளுடன் அல்ட்மார்க் என்னும் ஜெர்மன் கப்பல் நார்வேஜியன் கடல் வழியாக தாய் நாட்டிற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருக்கும்போது அதை பிரிட்டிஷ் சண்டைக் கப்பல் ஒன்று துரத்தி பிடித்துவிட்டது. அந்தக் கப்பலைக் காத்து வந்த ஜெர்மனியர்களுடன் சண்டை செய்து அதிலிருந்து பிரிட்டிஷ் கைதிகளை வசப்படுத்திக்கொண்டது. இந்த சம்பவம் ஐரோப்பா முழுவதையும் பிரட்டி எடுக்கிறது. நார்வேஜியன் கடலில் இதுபோன்ற விரோதி யுத்தக் கப்பல் பிரிட்டிஷ் கைதிகளுடன் செல்லுவதைக் கவனியாமல் இருந்ததோடு நில்லாமல், பிறகு பிரிட்டிஷ் கப்பல் அல்ட்மார்க்கைத் தேடும் போது நார்வே ஒன்றும் உதவி செய்யாததால், அத்தேசத்தின் நடுநிலைமைக்குப் பங்கம் வந்துவிட்டது என்று பிரிட்டன் இடித்துக் காட்டுகிறது. நார்வேயோவெனில் "எங்களுக்கு அதெல்லாம் தெரியாது. எங்கள் கடலில் இருந்த கப்பலை எப்படி பிரிட்டன் கைப்பற்றி அதிலிருந்த கைதிகளை மீட்டுக்கொள்ள முடியும்? அதனால் எங்கள் நடுநிலைமைக்குக் கேடு வந்துவிட்டது. இதற்கு பிரிட்டிஷார்கள் ஏதாவது செய்துதான் ஆகவேண்டும்" என்று முணு முணுக்கிறது. இதனிடையில் ஜெர்மனி தன் கப்பலையும் பிரிட்டிஷ் கைதிகளையும் இழந்ததால் வெறிகொண்டு "இனி இது போன்ற சம்பவங்களைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நார்வே இது போல் பிரிட்டிஷ் அட்டூழியங்களைக் கண்டனம் செய்தால் மாத்திரம் போதாது. சுறுக்காக ஏதாவது செய்யவேண்டும். இல்லாவிட்டால் நார்வேயின் நடுநிலைமையை நாங்கள் மதிக்கமாட்டோம்" என்று மிரட்டுகிறது.

லடோகா ஏரிப் பிரதேசத்தில் பின்னிஷ் சேனை பெருந் தோல்வியுற்றது என்று செய்தி கூறுகிறது. பின்லாந்து ஸ்வீடனை உதவி கேட்டதாகவும், அதற்கு ஸ்வீடன் தான் உதவி புரிந்தால் தனக்கு அபாயம், என்று எண்ணி மறுத்துவிட்டதாகவும் தெரிகிறது.

இந்தியாவில் மௌலானா அபுல்காலாம் ஆஸாத் அபரிமிதமான வோட்டுகளைப் பெற்று வெற்றிமாலை பூண்டு ராஷ்டிரபதியானார்.

ஆஸாத் காங்கிரஸ் தலைவராக வந்தவுடன் தேசத்துக்கு செய்தி ஒன்று அனுப்பினர். "நான் இத்தேர்தலில் வெற்றி பெற்றதனால் மஹாத்மா காந்தியினிடத்தில் ஜனங்களுக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது என்று நன்கு விளங்குகிறது. இதனால் அம்மகான் சொற்படி நடந்தால் நாம் சீக்கிரத்திலே நம் லக்ஷியத்தைப் பெறுவோம்" என்று கூறினர். இனி காங்கிரஸும் தேசமும் அனுவசியமாகக் காத்திருக்காது; ராம்கார் கூட்டத்துக்குப் பிறகே ஒரு தீவிர இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று வெளியிட்டார். ஆனல் சட்டமறுப்பை ஆரம்பிப்பதற்கு ஒரு நிமிஷம் முன்னல் கூட, சமரஸத்துக்கு காந்திஜியை வைஸ்ராய் அழைத்தால், காந்திஜி சென்று பேசத் தயாராக இருக்கிறார் என்றுரைத்தார். ஹிந்து—முஸ்லிம் பிரச்னை இப்பொழுது எல்லோருடைய யோசனையையும் கவரக்கூடியதாக இருந்தாலும், அது இனி தேச முற்போக்குக்கு இடையூராக இருக்கமுடியாது என்று தெளிவாகக் கூறுகிறார். ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை மௌலானா தலைமையின் கீழ் ஏற்படும் என்று எங்கும் நம்பிக்கை பரவி இருக்கிறது.

ஜின்னவும், தன் போக்கை விவரமாக டேய்லி மெயில் என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் விவரித்திருக்கிறார். தேசத்தின் முன்னேற்றத்தை முஸ்லிம்கள் ஒரு நாளும் தடுக்கமாட்டார்கள் என்று கூறுகிறார். முஸ்லிம் லீகின் கோரிக்கைகளை வெளியிட்டு ஒரு முடிவுக்கு வர அவர் எப்போதும் தயாராகவே இருக்கிறாராம்.

உதிர்ந்த மணிகள்

இந்தியாவிடம், பிரிட்டன் நன்றாக நடந்துகொண்டால் நாம் ஏன் வேறொரு அரசின் உதவியை எதிர்பார்க்க வேண்டும்?

ஸர்தார் படேல்.

* * *

பிரிட்டன் அரசியல் நிர்ணய சபையை அமைக்க இந்தியாவுக்கு அனுமதிகொடுத்தால், பிரிட்டிஷ் ஆதிக்கமும், பிரிட்டிஷ் வியாபாரமும் போய்விடும். இந்திய சமஸ்தானங்கள் மறைந்துவிடும். மைனாரிட்டியின் எதிர்ப்பு தோர்க்கடிக்கப்படும்; காங்கிரஸ் காரியக் கமிட்டியாலும் காந்தியாலும் ஆளப்பட்ட ஒரு ஹிந்துதேசம் தான் கிளம்பும்.

மஹம்மத்அலி ஜின்னா

* * *

இரண்டு வல்லரசுகள் ருமேனியாவை விரட்டுகின்றன. இந்த விரட்டல்கள் செயல் ரூபமாக மாறினால் நம் கடமை என்னவென்பது தெரிந்த விஷயம் தான்.

மாஞ்சேஸ்டர் கார்டியன்.

ஒரு ஹிந்து மாகாணத்தில், ஒரு முஸ்லிமோ அல்லது ஒரு கிறிஸ்தவரோ ஜனங்களிடம் சென்று அவர்கள் வோட்டைப்பெற்று பிரதம மந்திரியாக வரும் நாளைப் பார்க்க விரும்புகிறேன்.

ஸி. ராஜகோபாலாச்சாரி

* * *

பிரிட்டனின் வெற்றி இந்தியாவின் அடிமையை நீடிக்கச் செய்வதாயிருந்தால் அவ்வித வெற்றி உண்டாக வேண்டுமென்று நான் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கமாட்டேன்.

காந்திஜி

* * *

ஜனநாயகம் இந்தியாவுக்கு உகந்ததில்லை என்று ஜின்னா கூறுவது சுத்த தப்பு. பல வருஷங்களுக்கு முன் இதே ஜின்னா நேரு கமிட்டியில் என்னுடன் அங்கத்தினராக இருந்தபோது, ஒரு ஜனநாயகச் சர்க்கார் தான் இந்தியாவுக்குத் தகுந்தது, வேறெதுவும் பிரயோஜனமில்லை, என்று எங்களுடன் அவர் ஒத்துக்கொண்டதை ஞாபகப் படுத்தட்டுமா?

ஸி. விஜயராகவாச்சாரியார்

(439-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிற்கு டொமினியன் பதவி அளிக்க வேண்டுமென்றால் அதற்கு வேறு வழி கிடையாது. ஆனால் இனிமேல் இந்த அரசியல் நிர்ணய சபை சர்க்கார் பொறுப்பில் நடைபெறாது. ஆகையால் இந்த அரசியல் நிர்ணய சபையை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு ராம்கார் காங்கிரஸைச் சேர்ந்ததாக ஆய்விட்டது. தனித் தொகுதியைக் ஒழித்து கூட்டுத் தொகுதியை கையாண்டு நாம் ஏற்கனவே போட்ட திட்ட வழியிலோ, இதர வழியிலோ இந்த நிர்ணய சபையைக் கூட்ட வேண்டிய தீர்மானங்கள் ராம்கார் காங்கிரஸில் தீர்மானிக்கவேண்டியது அவசியம். இந்த நிர்ணய சபை அமுலுக்கு வந்துவிட்டால் அதை நிராகரிக்கக் கூடிய சக்தி ஒருவருக்கும் கிடையாது. இதைப் பூர்த்திசெய்ய வேண்டியது ராம்கார் காங்கிரஸின் முதற் கடமை. அதுதான் மௌலானா அபுல் கலாம் ஆஸாதின் உண்மையான வெற்றி. மகாத்மாவின் மனோரத பலனும் பூர்த்தியாகும். இந்தியாவின் அரசியல் தேருக்கும் ஓர் புது அச்சு போட்டதாகும்.

கே. எஸ். வேங்கடரமணி

அதிகப் பிரஸங்கம்

உள்ளும் புறமும்

அரவம் தீண்டி உயிர் துறந்தான் அரசன் பரீக்ஷித்து. வினைப்பயனால் தகப்பனை இழந்தோமென எண்ணி வாளாவிருந்தான் வேந்தன் ஜனமேஜயன். ஆனால் மஹரிஷி உதங்கரோ அவ்விதம் எண்ணவில்லை. "தட்சகன் என்ற ஸர்ப்ப அரசன் செய்த சூதினால் உன் தந்தையை இழந்தாய். ஆகையால் அவனையும் அவன் வம்சத்தையும் ஸம்ஹரிக்க ஸர்ப்ப யாகம் செய்" என்று அரசனைத் தூண்டி யாகம் செய்ய ஏற்பாடு செய்தார் உதங்கரிஷி. யாகம் நடந்தது. இந்த யாகக் காட்சியை ஆனந்த விகடன் தை 29-ந் தேதி முகப்புப் படத்திலும், 67 வது பக்கத்திலும் காணலாம். இவ்விரு படங்களிலுமுள்ள விசேஷமே "உள்ளும் புறமும்." முகப்பு படத்தில் உதங்கர் ய(க்)ஞோபவீதமின்றி இருக்கிறார். ஆனால் உள் படத்திலோ முனிவரின் திருமேனியில் பிரகாசிக்கிறது யக்ஞோபவீதம்.

இந்த உதங்கரின் வம்ச பரம்பரையில் உதித்தவரே நம் ராஜகோபாலாச்சாரியார்—ராஜாஜீ அல்ல—பரவஸ்துவே. புரவஸ்துவுமில்லை, கோபுரவஸ்துவுமில்லை. அஸல் பரவஸ்துதான். பரவஸ்து என்றால், தனக்கே சொந்தமில்லாத, அன்னியரின் சொத்து, என்பதை இப்பரவஸ்து நிதர்சனமாக விளக்கிக்காட்டி வருகிறார். "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்று சொன்னார் தமிழ் நாட்டுத் தவயோகி. இப் பரவஸ்துவைக் குறித்துத்தான் இவ்விதம் சொன்னாரோ என்று சந்தேகமாய் இருக்கிறது. பரவஸ்துவின் மேனியில் 'பூணூல்'. ஆனால் பேசுவதோ 'சுயமரியாதை' - ஜாதியிலோ பிராமணர். காரியத்திலோ 'ஸமதர்மம்'. இச் சமதர்மிக்கு யக்ஞோபவீதமேன், உதங்கர் கோத்ரமென்றா இன்னும் அதை வைத்துக் கொண்டிருக்கிறார்.

'பூணூல்' என்றதும் பாரதம் ஞாபகத்திற்கு வருகிறது. துரோணர் இறந்ததும் கௌரவசேனை சேனாதிபதி பதவிக்கு துரோணர் மகன் அச்வத்தாமனும் கர்ணனும் போட்டி போட்டார்களாம். துர்யோதனன் சபையில் இவ்விருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு ஒருவரையொருவர் வைது கொண்டார்களாம். 'பிராமண அதமன்', 'தேர்ப்பாகன்' என்ற வச்வுகள் அடிக்கடி ஸபையில் கோஷித்தனவாம். "நீ பிராமணன் என்றதால் உன்னைக் கொல்லாமல் சும்மா விடுகிறேன்" என்றானாம் கர்ணன். கோபம் ஜ்வலிக்க "இதோ விடுத்தேன் ஜாதியை" என்று கூறியவண்ணம் அச்வத்தாமன் பூணூலை அறுத்தெறிந்தானாம். இதை அனுஸரித்து நம் பரவஸ்துவும் கோபித்துக்கொண்டு, பூணூலை அறுத்தெறிந்துவிட்டு, ஒரு தக்ளிக்குக் கொடுக்கும் சிறு வேலையை நிறுத்தி, காந்தீயத்தை எதிர்ப்பாரென்று திடமாக எண்ணுகிறேன்.

அச்வத்தரமன் பூணூலை அறுத்தெறிந்த படலத்தை தயவு செய்து பாரதத்தில் தேடாதீர்கள். ஏனென்றால் அது பாரதத்தில் இல்லை. வ்யாஸர் ஆரியராதலால் இதைப் பாரதத்தில் எழுதாது விடுத்தார். பட்டநாரணர் என்றவர் எழுதிய "வேணீ ஸம்ஹாரம்" என்ற வடமொழி நாடகத்தில் இந்தப் படலத்தைக் காணலாம்.

இப் பட்டநாரணர் "ஆரியரா, அல்லது திராவிடரா, அல்லது திராவிட அபிமானியா" என்ற விஷயத்தை நன்றாக ஆராய்ச்சி செய்து, அவர் திராவிடர்தான் என்பதை நிரூபித்து, ஸ்வாமி ஸஹஜானந்தர் "ஸண்டே அப்ஸர்வரில்" விளக்கி எழுதி, திராவிடத்தொண்டு புரியுமாறு அவரை வேண்டிக் கொள்ளுகிறேன்.

அதிகப்பிரஸங்கி.

ஏ-மாற்றல்

(டி. எஸ். ராமானுஜம், எம்.ஏ.எல்.எல்.பி.)

நாகரிகம் என்ற பதத்திற்கு இனிய நடைமுறை என்பதுதான் உண்மைப் பொருள். வரவர நமது நாட்டிலும் மற்ற தேசங்களிலும் மோகரிகமே ஆட்சி பெற்று வருகிறது. "என்னின்றி யாது மில்லை. கயிற்றில் மணிபோல் என்னுள் எல்லா உலகங்களும் குயிற்றப்பட்டுள் ளன" என்று கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் சொன்னார். "அவனின்றி ஒரு இலையும் அசையாது" என்று ஏசு நாதர் பைபிளில் கூறினார். கண்ணுக்குக் காண்பதெல்லாவற்றுக்குள்ளும் கிடக்கும் கடவுள் ஒன்றே என்று ஞானிகள் சொன்னபோதிலும், நமது மனம் இருட் கடலில் மூழ்கி, வேறுபாடுகளைக் கற் பித்து, உயிருக்குயிராயிருக்கும் கடவு ளைக் கலந்து களிப்புற்று வாழாமல், அவ னிடமிருந்து பிரிந்து புறஞ்சென்று கசப் புற்று வாழ்கிறது. ஐதீகச் சடங்குகளும், ஜாதி மதச் சண்டைகளும், தர்க்க வாதங் களும், எல்லாவற்றையும் உண்டு ஏப்பம் விடுகின்ற போர் வெறிகளும், உலக முழு மையும் பரவி பேய் பிசாசுகளைப்போல் கூத்தாடி வருகின்றன. தண்ணீரைப் பானி யென்றால், தன்மைக்குக் கே டுண்டோ? மயில், குயில், வாத்து முத லிய வடிவங்களுள்ள மிட்டாய்களிலெல் லாம் இனிப்பு ஒன்றல்லவோ! பல விளக்குகளின் வெளிச்சம் ஒன்றுதானே. எத்தனையோ ராக தாளங்களிருந்தாலும் அவற்றின் சுருதி ஒரே ஓங்காரந்தான். இப்படி இயற்கைப் பொருள்களின் உள் ளக்தோறும் ஒருமைப்பட்டுத் தோன் றும் பரம்பொருளை மறந்து மோகம் பெற்ற மனது உலக வாழ்வில் பல வடி வங்களையும் வேறுபாடுகளையும் உண்டாக்கி விட்டது. அதனால் நமது அனுட்டா னம் அநாகரிகமாகி விட்டது. "சிந்தை யில் கள் விரும்பி சிவ சிவ" என்பதைப் போலும், "பைபில் வேதாந்தமும் கையில் வெடிகுண்டும்" என்பதைப் போலும் நாம் நடந்து வருகிறோம்.

ஆத்ம தர்மம் என்றும் யுக தர்மம் என்றும் இரு வகைப்பட்டது தர்மம். உண்மை, அன்பு, தூய்மை, உடலுறுதி, கடவுளுறுதி, முதலியவைகள், தெய் வாம்சமான மனிதனின் ஆத்ம தர்மங் கள். அவைகளை மாற்றமுடியாது; மாற்ற முயலுவதும் தவறு. பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள், எண் எழுத்து கள், முதலியவைகளைப் பற்றி ஏற்பட் டிருக்கும் சம்பிரதாயங்களும், ஐதீகங் களும், மனு, மோஸஸ், முதலிய மனிதர் கள் இயற்றிய யுக தர்மங்கள். அவைகள் யுகத்துக்கு யுகம் மாறித்தான் நிற்கும். காலம் என்ற ஜீவ நதி பழைய கட்டுப் பாடுகளை, பாசி பிடித்த தேக்கங்களைப் போல், உடைத்து எறிவது சகஜமே. "எனதே நாடு, எனதே நற் பழக்கம், எனதே பாஷை" என்ற பிற்போக் குள்ள பிடிவாதக் கொள்கைகளைக் கொண்டு மனித வாழ்வின் முன்னேற் டத்தைத் தடுப்பதால் பயனென்ன? கால வெள்ளத்தில் மடிவதுதான்!

ஐரோப்பாவுக்குச் சில நாள் போயிருந்து திரும்பிய பிறகு, நாகரீ கத்தைக் கற்றுக்கொண்டு,

> "பழயது சாப்பிடமாட்டேன்,
> பழயது பண்டய (foolish) பழக்கம்,
> பழயது சாப்பிடமாட்டேன்;
> காப்பி, டீ, கோகோவே சிலாக்கியம்,
> [சிலாக்கியம்,
> பழயது சாப்பிடமாட்டேன்."

என்று கூத்தாடும் இந்தியன் ஒரு கட்சி. "இது பழய வழக்கம், பழய ஆசாரம், முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டது. இராமர் வில்லால் சண்டை போட்டார், ஆதலால் குண்டுகளால் சண்டை செய் வது தர்மமல்ல. ரிஷிகள் ஓலையில் எழுதி

னர்கள், ஆதலால் அச்சிடப்பட்ட புத்தகங்கள் மதிக்கத் தக்கவையல்ல. என் முப்பாட்டன் காலால் காசி யாத்திரை செய்தான், ஆதலால் புகைவண்டிகளில் ஏறி பிரயாணஞ் செய்வது அனாசாரம்," என்று திருப்பித் திருப்பி பல்லவி பாடும் இந்தியன் மற்றொரு கட்சி. இவ்விரு கட்சியும் உண்மையை அறியவில்லை யல்லவா? ஏன்? மோகரீகம் பெற்ற மனதால் வந்த கேடு! இதைத்தான் "மாயை" என்று ஞானிகள் சொல்லுகிறார்கள். இவ்விதம் நம்மை ஏமாற்றி வரும் மனதை எவ்வாறு சீர்படுத்தி, உலக வாழ்வில் வேற்றுமையை ஒழித்து, ஒற்றுமையை நிலைநாட்டுவது, என்ற விசாரம் அன்ன விசாரத்துக்குமேல் அதிகரித்து விட்டது.

ஒருவன் தாய் பாஷையை மறக்க வேண்டாம். தேச முன்னேற்றத்திற்காகவோ, உலக முன்னேற்றத்திற்காகவோ ஒரு சமுதாய பாஷையைக் கற்றுக்கொள்ளக்கூடாதா?

பழைய சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்று புராதன முறைகளை அனுசரிக்கும் இந்தியப் பெரியோர்களில் சிலர் பண ஆசையினால் தங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் ஆங்கிலப் படிப்பை படிக்க வைத்திருக்கிறார்களே. ஏன் அவ்வித மாறுதல்களை, மனதால் ஏமாற்றப்படாமல், அறிவு விசாலத்தாலும் அன்பு விசாலத்தாலும், அவர்கள் தழுவக் கூடாது? ஆத்ம தர்மங்களை மாற்றாமல், காலத்திற்கேற்ற யுக தர்மங்களை உண்டாக்கி, தனி வாழ்வு பொது வாழ்வு இவ்விரண்டும் பூரணம் பெறக்கூடிய சம்பிரதாயங்களை சிருஷ்டித்து, ஸமத்வ ஸத்ய ஜோதி வாழ்வை அடைய ஏன் நாம் பாடுபடக்கூடாது? தன்னல முக்தியையும் தனிச்செருக்கையும் விரும்பாது, பொதுவுடைமையை ஏற்படுத்தி, அப் புது உடைமையை அருளுடைமை யாக்கி, மனித சமுதாயம் ஒன்றுபட்டு அன்பினாலும் அறிவினாலும் வளர்ச்சி பெறும் கொள்கைகளையே ஏன் நாம் ஆதரிக்கக் கூடாது? வயிற்றுப் பிழைப்புக்காகவும் துப்பாக்கி பயத்தினாலும் பழக்க வழக்கங்களையும், பாஷை மதங்களையும், மாற்றிக் கொண்டுதானே வருகிறோம். ஒவ்வொரு மனிதனும் ஒரு நடமாடும் கோயில், என்று நன்குணர்ந்து ஹரிஜனங்களை நமது கோயில்களுக்குள், நாம் ஏன் மனப்பூர்ணமாக வரவழைத்துக் கொள்ளக்கூடாது? நமது தேசத்தின் உண்மையான சநாதன தர்மம் என்னவென்றால், "ஏகோ தேவ: —ஒன்றே கடவுள்," "ஸர்வ பூதேஷு கூட: —எல்லாருள்ளும் அக் கடவுள் மறைந்துறைகின்றது," "ஸர்வ வியாபி—அது எங்கும் பரவியுள்ளது" என்ற மூன்று வாக்கியங்களுக்கேற்ற மனோபாவங்களே!

ஒவ்வொரு ஊரிலும் இப்பொழுது இருக்கும் மதக் கோயில்களை இடிக்க வேண்டாம். இவைகளுடன் இந்தியர்களுக்கெல்லாம் பொதுவான ஒரு கோயிலையும், உலக சமுதாயத்திற்கே பொதுவான ஒரு கோயிலையும் நாம் ஏன் கட்டக்கூடாது? நமது நாட்டில், ராம கிருஷ்ண மிஷன், பிரும்மஞான சபை (Theosophical Society) இவைகளின் கட்டிடங்களில் எல்லா மதாசாரியர்களையும் வைத்துக் கும்பிடுகிறார்கள். அதனால் எந்த மதத்துக்கு என்ன இடையூறுகள் உண்டாகிவிட்டன? இச்சமரஸ ஆலயங்களால் நமது நாட்டுக்கு அறிவும், அன்பும், ஆன்ம விளக்கமும் சற்று உண்டாகி யிருக்கிற தென்பதில் சந்தேகம் உண்டோ?

இந்தியாவின் தேசாபிமானிகளில் ஒரு சூடாமணிபோல் விளங்கும் லோகமானிய திலகர், ஹிந்துக்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவதற்காக கணேசர் உற்சவம் என்ற ஒரு பழக்கத்தை உற்பத்தி செய்தார். விஷ்ணு, சிவன், என்ற தேவதைகளின் பெயரை வைத்தால், வீண் சண்டை கிளம்புமென்று உணர்ந்து, பல ஹிந்துக்களுக்கும் பொதுவான விநாயகரைப் பிடித்துப் போட்டார். அதே விதமாக, ஹிந்துக்களுக்கும் மஹம்மதியர்களுக்கும் ஒற்றுமை உண்டாக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டை நமது ஜனநாயகர்கள் ஏன் செய்

பக்கூடாது? "இந்தியன்" என்ற பதத்தில் "ஹிந்து" என்றதொனி தொக்கிநிற்கிறதென்று சில மஹம்மதியர்கள் அஞ்சுகிறார்கள். வெகு காலத்திற்கு முன், மஹம்மது பிறப்பதற்கு முன், ஹிந்து மதம் பிறப்பதற்கு முன், நமது நாடு பாரத வர்ஷம் என்று கூப்பிடப்பட்டதால், இந்தியாவை பாரத வர்ஷம் என்றும், அதில் ஒரு அரசாங்கத்துக்கு கட்டுபட்டு வசிக்கும் பிரஜைகளெல்லோரையும் பாரத வர்ஷிகர்களென்றும், கூப்பிட்டால், ஹிந்து-மஹம்மதிய போராட்டங்கள் குறைய ஆரம்பித்து விடுமென்று தோன்றுகிறது.

மனிதனுக்கு உள் அமைதியில்லாததால், உலக அமைதி ஏற்படவில்லை. உள் ஒற்றுமையில்லாது உலக ஒற்றுமை இயலாது. 'ஏமாற்றல்' என்ற பதத்திற்கு இரு பொருள் உண்டு. மனது நம்மை வித்தியாச பாவங்களால் மோசம் செய்து நாகரீகத்தை அழித்து வருதல், என்பது ஒரு பொருள். அதி விசேஷமான மற்றொரு பொருளும் உண்டு. "ஏ" என்ற தமிழ் சப்தம் ஆங்கிலத்தில் "A" என்று எழுதப்படும். "A" என்றால் அப்பாஷையில் "ஒன்று." இங்கிலீஷையும் தமிழையும் ஆதி அந்த பாஷைகளாய்க் கருதி, சக்தி சிவன் என பாவித்து, அவற்றின் சேர்க்கையால் வெளிப்படும் உண்மையைக் கவனிப்போம். "A"—மாத்தல் என்பதின் பொருள்:—எல்லாவற்றிற்கும் சிருஷ்டி கர்த்தாவாய் விளங்கும் "ஒன்று" தான் படைத்த மக்களை பலவாறாய் மாற்றி வருகிறது. எதற்காக? உள்ளொற்றுமையை உலக ஒற்றுமையாய் வெளிக்காட்டி அதை நிலை நாட்டுவதற்கே! இவ்வுண்மைக்குத்தான் நாகரீகம் என்ற பதம் பொருந்தும். இதை நன்குணர்ந்து மோகரீகம் பெற்றமனதால் நாம் ஏமாந்து போகாமல் இருப்பது நமக்குள்ளிருக்கும் கடவுள் நமக்கு இட்டிருக்கும் கடமை. ஆதலால் மனம்போன போக்கெல்லாம் போகாமல், கூடியமட்டும் பல ஜனங்களுக்கு பொது ரஸம் ஏற்படுமாறு ஆசாரங்களையும் அனுட்டானங்களையும் உண்டுபண்ணும் சம்பிரதாய கர்த்தாக்களை தேவதூதர்களென்று கருதி, அவர்களின் பேச்சுகளின் இன்பத்தேன் நமது காதினிலே வந்து பாயும்படி நடந்து கொள்வோம். உலகத்தைப் பலவாறாகப் பிரித்து, ஜாதி மதம் நடை பாஷை முதலிய வெளி விவகாரங்களில் மனது செல்லும்படி போரையும் பொறாமையையும் அதிகப்படுத்தி மனிதனுள்ளே கிடக்கும் கடவுளை மறைக்கும் வண்ணம் சம்பிரதாயங்களையும் பேச்சுகளையும் கற்பிக்கும் படாடோபிகளை கலி புருஷர்களென்று கருதி அத்துஷ்டர்களைக்கண்டு தூர விலகி நிற்போம். காங்கிரஸ் கட்சி தேவலையா ஜஸ்டிஸ் கட்சி தேவலையா, ஹிட்லர் தேவலையா சேம்பர்லின் தேவலையா, இந்தியாவின் கொடி சிவப்பாய் இருக்க வேண்டுமா வெளுப்பாயிருக்க வேண்டுமா, அஹிம்சை தர்மத்துக்கும் யுத்த தர்மத்துக்கும் முடிபோட முடியுமா முடியாதா, ஜனநாயகம் வேண்டுமா ஏகாதிபத்யம் வேண்டுமா—இத்தகைய கேள்விகளுக்குச் சரியான விடையளிப்பதெவ்வாறு? "ஏமாற்றல்", "A - மாற்றல்" என்ற இரு மாத்துக்கல்லையும் கையாளலாம். ஆனால் எந்தக் கல்லில் உறைத்தால், விடைகளிலிருந்து தங்கம் வெளிப்படுமென்பது பரீக்ஷித்துப் பார்த்தால்தானே தெரியும். சங்கம் செய்வது தங்கம் செய்யாது. உலகெல்லாம் ஒரு தெய்வச் சங்கம் என்று சொல்லப்படும் வேதவாக்கு வீண் போகாது. அதை நம்பினால் ஏமாந்து போகமாட்டோம், கெட்டுப் போகமாட்டோம். அப்படி நம்பிக்கெட்டால் கூட, என் மட்டும் பாதகமில்லை.

வெண் தாமரை

"காங்கேயன்"

எங்கள் ஊரைப்போல உலகத்திலே வேறு இடம் கண்டுபிடிக்க முடியாது. எங்கு பார்த்தாலும் முட்செடிகளும், இடிந்த கிணறுகளும் திவ்யமாய் இருக்கின்றன. அந்தக் கிணறுகளில் தண்ணீர் கிடையாது. குளத்தில் நெல் காயப் போடலாம் என்றால், காடாரம்ப பூமியாகையால் நெல்லும் விளைவது கிடையாது. இங்கே இன்னொரு விஷயம்! எங்கள் தெருவுக்குக் கிழக்கே ஒரு சிவன் கோவில்கூட இருக்கிறது. ஆனால் கோவிலுக்கு ஒருவரும் போவதில்லையாகையால் எப்போதும் பூட்டித்தான் வைத்திருப்பார்கள்.

இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த எங்கள் ஊர் தாலுக்கா தலைநகரம். அதனால் யாராவது உத்தியோகஸ்தர்கள் வந்து போய்க் கொண்டிருப்பார்கள். இப்படி எங்கள் ஊருக்கு வந்து அகப்பட்டுக் கொண்ட உத்தியோகஸ்தர்களில் ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் சாம்பமூர்த்தியும் ஒருவர்!

என்ன ஆச்சர்யம்! சாம்பமூர்த்தி வந்ததும் எங்கள் ஊரில் ஓர் புரட்சியை உண்டுபண்ணிவிட்டார். ஜனங்கள் வம்புப் பேச்சை விட்டுவிட்டார்கள். சீட்டுக்கச்சேரிகள் ஒழிந்தன. அவர்கள் கோவிலுக்குக் கூடப் போக ஆரம்பித்தார்கள். வீட்டுப் பெண்மணிகளிடம் கூட அபரிமிதமான தெய்வ பக்தி காணப்பட்டதென்றால் அதிகம் சொல்வானேன்?

இதற்கெல்லாம் காரணம் சாம்பமூர்த்தியின் பெரு முயற்சிதான். தினம் இரண்டு வேளை அவரது வீட்டில் பஜனை நடத்துவார். பாண்டுரங்கனின் படத்தை வைத்துப் பூஜித்து வீணாகானம் செய்து மகிழ்வார். ராமநாம கீர்த்தனைகளை உள்ளமுருகிப் பாடிக் கண்ணீர் விடுவார். இவ்வளவு திரிகரண சுத்தியான பக்தியை எங்கள் ஊர் மஹாஜனங்கள் கண்டு பஜனையில் கலந்து கொள்ள ஆரம்பித்தார்கள். நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரே இவ்வளவு பக்தியோடு பஜனை செய்யும் போது, தாங்களும் அவருடன் சேர்ந்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லுவதில் தோஷமில்லை என்பதை உணர்ந்தார்கள்.

ஆம்; சாம்பமூர்த்தி மெய்மறந்து தான் பஜனை செய்வார். காலையில் பஜனை செய்து கொண்டு சிவன் கோவிலில் தரிசனம் செய்துவிட்டு வீட்டுக்குப் போகும் போது பார்க்க வேண்டுமே! கையில் ஜாலரா ஒலிக்க காலில் சலங்கைகள் கட்டிக்கொண்டு நர்த்தனம் செய்யும் அழகைப் பார்த்தால், "இவர் ஏதோ ஒரு அமானுஷ்ய மனிதர்தான்" என்று எண்ணுவோம். வயது முப்பது உள்ள ஒரு மனிதர், இவ்வளவு யௌவனப் பருவத்தில் இப்படி திருக்கோலம் பூண்டு காட்சியளிப்பது ஆச்சரியமாயிருந்தது. மிகவும் சுகமாகக் காலங்கழிக்க வேண்டியவர் இப்படி ஏகாங்கியாக ராம பஜனை செய்து விரக்தி மார்க்கத்தை கைக்கொள்ளக் காரணமென்ன? சாம்பமூர்த்தியை நான் கவனிக்கத் தொடங்கியதிலிருந்து என் திகைப்பு வளர்ந்து வந்தது. அவர் ஒருவருடனும் அதிகமாகப் பேசமாட்டார். ஏதோ ஒரு வார்த்தை யாருடனாவது. அவ்வளவுதான். ஆனால் கடைசல் பிடித்தாற்போலுள்ள அவரது அழகிய முகத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருந்த அந்த சோகத்தை நான் என்னவென்று சொல்வேன்?

சாம்பமூர்த்தியின் வாழ்க்கையில் ஏதோ மர்மம் இருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. அவரது வாழ்க்கையில் ஏதோ மனம் குமுறும் சம்பவங்

கள் நிகழ்ந்திருக்க வேண்டும். எதிர் பாராத ஏமாற்றங்கள் ஏற்பட்டு வாழ்க்கையின்பத்தைக் கபளீகரம் செய்திருக்கவேண்டும். ஆஹா, இப்படியும் இருக்கக்கூடுமல்லவா? அவரது யௌவன மாகிய கால்வானில் ஒரு காதல் ஜோதி தோன்றி அணைந்திருக்குமோ என்னமோ? அவர் காதலித்த பெண்ணை அடைய முடியாமல் போய், அதனால் வாழ்வை வெறுத்து சந்நியாசம் வாங்கிக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் முகத்தில் ஏன் இவ்வளவு சோகமும் ஏமாற்றமும் குடி கொண்டிருக்கவேண்டும்? ஒரு நாள் திடீரென்று எதிர்பாராத விதமாக அவரே விரக்தியின், காரணத்தை எனக்கு எடுத்துக் கூறினர். ஆ! நான் நினைத்ததற்கு அது எவ்வளவு எதிர்மாறானது. இது மாதிரி தான் மனிதர்களைப் பற்றி நாம் கற்பனையின் உதவியால் தாறுமாறாக எண்ணி விடுகிறோம். ஆனல் உண்மைக்கும் கற்பனைக்கும் எவ்வளவு வித்தியாசம்!

அவர் வீட்டுக்கு நான் போனபோது பாண்டுரங்கன் அருகில் அவர் உட்கார்ந்து கண்ணீர் விட்டுப் புலம்பிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டவராய் எழுந்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உபசரித்தார். அவரது மர்மத்தை அறிந்துகொள்ள ஆவல் கொண்ட எனக்கு ஏதாவது விசாரிப்போமா வேண்டாமா என்று நான் தயங்கி உட்கார்ந்திருந்தபோது, அவரே தன் துக்க சரிதத்தைக் கூறினர்.

சாம்பமூர்த்தி தம் இருபத்தைந்தாவது வயதில் கல்யாணம் செய்துகொண்டாராம். மூன்று வருஷ காலம் இன்பமாக மனைவியோடு காலத்தைக் கழித்தாராம். திடீரென்று அவர் மனைவி இறந்து போகவே, சாம்பமூர்த்தி உலகை வெறுத்து ஆத்மார்த்திக வழியில் ஈடுபட்டுவிட்டார். இது தான் அவர் கூறியதின் சாராம்சம்.

ஆனல் அவருக்கும் பத்மினிக்கும் உள்ள ஆத்ம்ரீக நட்பை உருக்கத்துடன் எடுத்துக் கூறியபோது என் மனம் தடுமாறிற்று. "ஸார்! பத்மினியென்றால் பத்மினிதான். அவ்வளவு அழகாக இருந்தாள். சலவைக் கல்லால் செதுக்கின விக்கிரகம் மாதிரி இருந்தாள் ஸார். அவள் குணமோ ஒப்பில்லாதது. மகாசுவேதைக்கு நிகரான அந்த அற்புதப் பெண்ணை வேண்டுமென்றே வெகு நாள் காத்திருந்து மணம் செய்து கொண்டேன். ஆனல் பாவிக்கு இன்பம் உண்டா? அவள் போனபிறகு இந்த உலகம் பாலைவனமாகிவிட்டது, ஸார்!......

......ஐயோ! அவள் ஞாபகம் வந்து என் மனதைப் பிளக்கிறது. அவளை அடியோடு மறந்து விடலாமென்று நான் பாண்டுரங்கனிடம் மனதைச் செலுத்தி நிஷ்டை செய்கிறேன். ஆனல் இன்று பத்மினி ஞாபகம் வந்துவிட்டது. ஸார், ஐந்து வருஷங்களுக்கு முன் இதே மாசம் இதே தேதியில் தான் பத்மினியைக் கலியாணம் செய்து கொண்டேன்," என்று கூறிக் கண்ணீர் விட்டார்.

இந்த விஷயத்தை தெரிந்து கொண்டதும் எனக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. தற்கால நாகரீக இல்லற வாழ்க்கையில் இவ்வளவு மணம் பொருந்திய மலர்களைக் கண்டிருக்கிறோமா? இத்தகைய பரிசுத்தமான மனுஷ்யரின் காதல்தான் எவ்வளவு உத்கிருஷ்டமானது? இந்த வாலிபர் புலன்களை அடக்கி செய்துவரும் நிஷ்டை எவ்வளவு மகத்தானது?

ஆனல் பாவம், எங்கள் ஊரிலேயே அவர் ஓர் பெரிய சோதனைக்கு உள்ளாகப் போகிறார் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

* * *

அன்று தை வெள்ளிக்கிழமை. பஜனை வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. தெருவிலுள்ள சகல ஆண்களும் பெண்களும் அதில் கலந்து கொண்டார்கள். சாம்பமூர்த்தி கையில் தம்புரா சுருதியுடன் "மனஸா ஸ்ரீ ராமசந்த்ருனி" என்ற கீர்த்தனையை உருக்கத்துடன் பாடிக் கொண்டிருந்தார். எதிரில் பூஜைக்கான பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. பஜனையில் கலந்துகொள்ள

வந்தவர்கள் கையில் கொண்டுவந்திருந்த புஷ்பத்தையோ, கர்ப்பூரத்தையோ அந்தத் தட்டில் வைத்துவிட்டு அங்கங்கே உட்கார்ந்த வண்ணம் இருந்தார்கள்.

அந்த சமயத்தில் ஓர் வெண்தாமரை மலர் தட்டில் விழுந்தது. அம் மலருக்கும் அதைச் சொரிந்த கைகளுக்கும் என்ன ஒற்றுமை! சங்கினுல் கடைந்தெடுத்தது போன்ற அக்கைகளைப் பார்த்ததும், சாம்பமூர்த்தி தன்னை யறியாமல் இசையை நிறுத்தி அப் பெண்ணை ஒரு கணம் உற்றுப் பார்த்தார். அவர் முகம் பயங்கரமாக மாறிற்று. கண்கள் குபீரென்று சிவந்தன. மனதில் ஓர் புயல் வீசுவதை அறிந்தேன். சாம்பமூர்த்தி மறுகணம் சமாளித்துக்கொண்டு பஜனையை நடத்தினர். ஆனுலும் பஜனையில் அன்று ஜீவனில்லை. எப்பொழுதும் பாண்டுரங்கன் உருவத்தில் பதிந்திருந்த அவர் கண்கள் அங்குமிங்கும் அலைந்து அந்தப் பெண் எங்கே உட்கார்ந்திருக்கிறுள் என்று தேடின. அதற்குப் பிறகு அந்தப் பெண் உட்கார்ந்திருந்த திசைப் பக்கம் அடிக்கடி சென்று திரும்பின.

சரி; மனுஷர் அந்த அழகியைப் பார்த்து மனம் தடுமாறி விட்டார் என்று தெரிந்துகொண்டேன். மறுநாள் சாம்பமூர்த்தி என்னைக் கேட்ட கேள்விகள் என் சந்தேகத்தை பலப்படுத்தின.

"ஸார்! நேற்று பஜனைக்கு வந்தாளே ஒரு பெண், அவள் யார் ஸார்?" என்று திடீரென்று ஒரு கேள்வி போட்டார்.

"அன்று வெளுப்பாக இருந்தாளே, அந்தப் பெண்தானே? அவள்தான் ரஞ்சினி."

"ரஞ்சினி. ரஞ்சினியா?" என்று அகன்ற விழிகளுடன் இரண்டு தடவை சொன்னுர்.

பிறகு சட்டென்று உணர்ச்சியை அடக்கிக்கொண்டு, சமாளித்துக் கொண்டார்.

"ஸார்! அந்தப் பெண் ரஞ்சினி இருக்கிறுளல்லவா, அவள் அப்படியே பத்மினியைப் படம் பிடித்தாற் போல இருக்கிறுள், ஸார், அதே முகம், விழி, நடை எல்லாம் பத்மினிதான். பத்மினிதான் மறுபடியும் உயிர்பெற்று வந்து விட்டாளோ என்று சந்தேகப்படுகிறேன்" என்று கூறிவிட்டு "ஸார்! அந்தப் பெண் ரஞ்சினிக்கு இந்த ஊர்தானு, அல்லது...." என்று கேள்வி கேட்டு அவளைப்பற்றி இன்னும் தெரிந்து கொள்ள முபன்றுர்.

"ஆமாம் ஸார்! அந்த துரதிருஷ்டப் பெண்ணுக்கு பூர்வீகம் இந்த ஊர்தான். தாயில்லாத அந்தப் பெண்ணை அவள் தகப்பனுர் செல்வமாக வளர்த்து பட்டணத்திலே ஒரு உத்தியோகஸ்தனுக்கு கலியாணம் பண்ணிக் கொடுத்தார். ஆனுல், பாருங்கள், கலியாணம் நடந்த ஒரு வருஷத்துக்கெல்லாம் அவன் செத்துப்போய் விட்டான். மாப்பிள்ளை இறந்த ஏக்கத்தால் இவள் தகப்பனுரும் செத்துப்போய் விடவே, இவள் அனுதையாய்க் காலங்கழிக்கிறுள். இவளுக்கு ஒரு பாட்டி மட்டும் உயிரோடு இருக்கிறுள். அந்தப் பாட்டியும் இவளுமாகத் தான் இங்கே காலத்தைத் தள்ளுகிறுர்கள். இவள் துர்பாக்கியத்தை என்னவென்று சொல்ல?" என்று அவள் வரலாற்றைச் சொன்னேன்.

இந்த விபரத்தைக் கேட்டு சாம்பமூர்த்தி ஒரு கணம் மலைத்துப்போனுர். "அவள் ஒரு விதவையா?" என்று நாக் குழறக் கேட்டார். "பாருங்கள் ஸார், ஆண்டவன் லீலைகளை! இந்த ரஞ்சினி... யௌவனப் பருவத்தில் ஒரு மலர்; இதழ்களை இழந்து முள்ளில் சிக்கி' மடிவதைப் பார்த்தீர்களா? இது சகிக்க முடியாத கோரக் காட்சியாக இருக்கிறதே" என்று கூறி திகைத்துச் சற்று நேரம் உட்கார்ந்திருந்தார்.

* * *

கற்பனைகள் தோன்றி மறைவதுபோல சம்பவங்களும் திடீரென்று தோன்றி மறைந்து போகின்றன. நமது கட்டுக் கடங்காததும் அறிவிற் கெட்டாததுமான அச் சம்பவங்களைப் பார்க்கும்

போது மனிதன் சக்தியில் நமக்கு அவ நம்பிக்கை பிறக்கவில்லையா?

சாம்பமூர்த்தியின் வீட்டில் விதியின் வலியால் நான்கு நாட்கள் ஓர் நாடகம் நடைபெற்றது. ஆம்; பஜனை செய்து கொண்டிருக்கும்போது, சாம்பமூர்த்தி அமைதி இழந்து அடிக்கடி பெருமூச்செறிந்தார். கால்களை உள்ளே இழுத்து அடங்கும் ஆமைபோல் புலன்களை அடக்கி ஆண்டவனிடம் ஈடுபட்ட அவர், தறிகெட்ட காளைபோல் தவித்தார். ஒரு கணம் விழிகளைத் திறந்து தூரத்தில் உட்கார்ந்திருந்த ரஞ்சினியைப் பார்ப்பார். மறு கணம் கண்களை மூடி உணர்ச்சியை அடக்க எத்தனிப்பார். ஒரு சமயம் இப்புறம் திரும்பி அவரது கண்ணோட்டத்தை நான் கவனித்து விட்டேனே என்று என்னைப் பார்ப்பார். பாண்டுரங்கனுக்குப் பதிலாக ரஞ்சினி அவர் மனதைக் கொள்ளைகொண்ட விந்தையை எண்ணி வியப்புற்றேன்.

ஆனால், ரஞ்சினி எந்த நிலைமையிலிருந்தாள் தெரியுமா? தலைகுனிந்த வண்ணம் கீழ்ப்பார்வையால் அடிக்கடி மலைபோலுள்ள சாம்பமூர்த்தியைப் பார்த்தாள். வெள்ளை வெளேரென்ற அவள் வெண்தாமரை முகம் அப்போது சிவந்து பிரகாசித்ததைக் கண்டேன். அவள் கண்கள் கலங்கி யிருந்தது; மங்கலான விளக்கொளியில் மங்கலாகத் தெரிந்தது. ஆம்; அவள் மனதில் பெரும் புயல் அடித்து அவளைத் துடிக்க வைத்துக் கொண்டிருந்தது.

நான் எதிர்பார்த்த நாடகம் என் கண்முன் நடப்பதை நான் தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். மனக் கட்டுப்பாட்டை எதிர்த்து வாலிபத்தின் வேகம் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். நான்காவது நாள் ரஞ்சினியின் தடுமாற்றத்தையும், சாம்பமூர்த்தியின் போராட்டத்தையும் பார்த்தபோது, எது ஜெயிக்கப்போகிறதென்பதைப் பற்றி நான் சந்தேகப்படவில்லை. இதே மாதிரி எவ்வளவு நாளைக்கு நடக்கும், அது எந்த முடிவிற்குக் கொண்டுபோய் விடும் என்பதைப் பற்றி யாருக்குத்தான் தெரியும்?

ஆனால் ஐந்தாவது நாள் ஓர் அதிசயம் நடந்தது. என்ன ஆச்சரியம்? அன்றைக்கு ரஞ்சினி பஜனைக்கு வரவில்லை. அவள் வராதது திகைப்பைக் கொடுத்தது. அவள் வரவில்லை என்பதை சாம்பமூர்த்தி கவனித்தபோது பெரிதும் ஏமாற்றமடைந்தார். மறுநாள் விசாரித்ததில் அவள் வேண்டுமென்றே பஜனையைப் பஹிஷ்கரித்துவிட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டபோது, அவர் நெருப்பில் அகப்பட்ட புழுப்போல் தவித்தார்.

ஆ! இது நம்பக் கூடியதா? ரஞ்சினி இளம் மனதின் மேலான குணங்கள் வெற்றிபெற்று விட்டனவா? வேண்டுமென்றேதான் காதல் நாடகத்துக்கு முடிவாகத் திரைபோட்டு விட்டாளா? ஆம். கொடிய காதல் பாசத்தை கட்டுப்பாடு என்ற வாளால் அவள் வெட்டிவிட்டாள்!

மறுநாள் காலை சாம்பமூர்த்தியின் வீட்டிற்குள் நுழைந்தேன். நான் அங்கே கண்ட காட்சியை என்னவென்று சொல்வேன்? பாண்டுரங்கன் படத்திற்கெதிரே உட்கார்ந்து வாய்விட்டு சாம்பமூர்த்தி புலம்பிக் கொண்டிருந்தார்.

“பாண்டுரங்கா! ஒரு சிறிய பெண் தன் மனதைக் கட்டுப்படுத்திவிட்டாள். இவ்வளவு நாளாக உன்னை நினைத்து மனமுருகும் நான் மட்டும் புலன்களை அடக்க முடியாமல் மதியிழந்தேனே. இனிமேலாவது என்னை இதுமாதிரி சோதனைக்குள்ளாக்காதே” என்று கூறிக் கண்ணீர் விட்டார்.

சாம்பமூர்த்தி லீவ் எடுத்துக்கொண்டு எங்கள் ஊரைவிட்டுப் போய் ஒரு வாரமாகிறது. முன்பிருந்த ஆரவாரத்தையும் பஜனைக் கோஷத்தையும் இப்போது காணோம். மறுபடியும் எங்கள் ஊர் அந்தகாரத்தில் ஆழ்ந்து கிடக்கிறது.

பாக்கிய சாலி

(பண்டிதை வி. பாலாம்பாள்)

அவள் ஒரு பெண்பால்! அப்பொழுது தான் புக்ககம் புகுந்த உத்தமி! காதலனிடத்தினின்றும் மறையாத அன்புடையவள்! அவளைப் பதிவிரதையென்று கூற விரும்புகின்றீர்களா? நல்லது!

அவளது வயது பால்யத்திற்கும் யௌவனத்திற்கும் இடையிலிருக்கின்றது. "வளரிளமை" என்று சொல்வார்களே, அதைத்தான் அவளது இரு தனங்களும் குறிப்பிடுகின்றன! எனவே, அவளுக்கு அப்பருவத்திற்குரிய இயற்கையான வெட்கத்தின் மேலீட்டால் அவளது மனத்திலெழுகின்ற ஒரு சிறு காதலும் அவ்வப்பொழுதே மின்னல் போன்று பளிச்சென்று தோன்றுவதும் மறைவதுமாயிருக்கின்றது. அச்சௌந்தரிய வதனத்திலே! இப்பொழுது தன் கண் முன்னே வருபவன் தனதன்பிற்குரிய நாயகன்தானென்றாலும், அவன் முன் தலை நிமிர்ந்து நிற்கவும் அவள் துணிவு பெறவில்லை! ஆனால், அவளது உள்ளன்புடையவனுக்கு அப்பொற்கொடியாளின் புன்முறுவலுலாவிய வதனத்தை ஒரு பொழுதேனும் பகற்பொழுதே கண்டு களிக்க வேண்டுமென்ற அவா நாள்தோறும் வளர்ந்து வருகின்றது! நாட்கள் வாரமாக மாறிச் சென்றன! ஆயினும், அவ்விளங்கொடியின் வதனத்தைக் கவர்ந்து கொண்டிருக்கின்ற வெட்கத்தை அவன் அறிகின்றானாதலால், தனது உள்ளத்தில் கொழுந்து விட்டு எழும் ஆசையை அடக்கிக் கொண்டுதான் வருகின்றான்! அதுபோல் அவனது அகக்குறிப்பை அச்சிறுமியும் அறிந்து தானிருக்கின்றாள்! அவ்வழியில் செல்லுதற்கு அவளது உள்ளம் விரும்புகின்றது! ஆயினும், வெட்கம் அவளை அவ்வழியிற் செல்லுதற்கு எளிதில் அனுமதிப்பதில்லை.

"உள்ளன்புடைய அவருக்கேயான எனது உடலை அவர் இஷ்டப்படி கட்டித் தழுவி அனுபவிக்கக் கொடுத்துவிட வேண்டு" மென்ற நியாயம் ஒரு பக்கம்.

• "இன்று வரை நாணி நின்ற நான் காதனிடஞ் சென்று, இன்று எவ்வாறு தலை நிமிர்ந்து நிற்பேன்!" என்று கருதும் வெட்க உணர்ச்சி மற்றொரு பக்கம்.

இரண்டிற்குமிடையில் அகப்பட்ட அப்பசுங்கொடி ஒன்றுக்கும் முரணில்லாத ஒரு உபாயத்தைக் கைப்பற்றினாள்! நாயகனுக்குப் பின் தூங்கி, முன் எழுகின்ற அப்பொற் பாவை—அப்பசுங்கிளி—அன்றிரவிலே என்ன செய்தாள் தெரியுமா? அவன்வரு முன், எப்படியோ அயர்ந்து தூங்கி விட்டாள். அது என்ன தூக்கமென்பதை அவள்தான் அறிவாள்.

"இந்த சுருண்ட கூந்தல் என்னும் இருள் உனது சந்திரகாந்தியை மறைத்தொளித்து வைத்தால் அதனை நான் அறியேனு! இந்த முகமலரின் இதழமுதம் பற்றிப் பருகேனு!...........கண் வளர்கின்ற கமலமே! அன்பனுக்கன்றோ இந்த இன்ப இதழ்கள் உரியன?" என்று படுக்கையிலிருந்த ஸரோஜ கமலத்தைத் தழுவி யெடுத்தணைத்தான் ஒரு வாலிபன்!

அவன் யார் என்று சொல்ல வேண்டுமோ?

3

இரு தெய்வங்கள்

(ஜயலக்ஷ்மி)

கமல விலாசம் ஓர் அழகிய மாளிகை. மாளிகையின் சுற்றுபுறமுள்ள மனோகரமான நந்தவனம் மாளிகையின் சோபையை இன்னும் அதிகரித்தது. பிற்பகல் நான்கு மணி இருக்கலாம். அம் மாளிகையின் எஜமானியாகிய கமலாம்பாள் உல்லாசமாக ரேடியோ கானத்தை பருகியவண்ணம் பட்டுப் பாய்மீது அமர்ந்து தனது செல்வப் புதல்வி பரிமளாவிற்கு தலை பின்னிக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது அவர்கள் வீட்டு வேலைக்காரி பாக்கியம் பல்லை இளித்துக்கொண்டு கையை பிசைந்த வண்ணம் அவ்விடம் தோன்றினாள். கமலாம்பாள் அவளை பார்த்தும் கவனியாதவள்போல் இருந்து விட்டனள். இதைக்கண்ட பரிமளா சகியாதவளாய் "அம்மா, பாக்கியம் என்னவோ சொல்வதற்கு வந்திருக்காள்" என்றனள்.

பாக்கியம் "அம்மா சோத்துக்குரொம்ப கஷ்டமாக இருக்குதுங்க. வீட்டுக்காரர் காயலா படுத்து பதினேழு நாளாச்சுதுங்க. வைத்திய அய்யாவை கூப்பிடணும் கையிலெ ஒரு தம்படி இல்லீங்க........" என்று சொல்ல ஆரம்பித்தாள்.

கமலாம்பாள் "தெரியுமே, உன் சங்கதி. உதயராகம் பாட ஆரம்பித்துவிட்டாயா? சம்பளம் வாங்கி பத்து நாட்களுக்குள் முன் பணம் கேட்க வந்துவிட்டாயா?" என்று கடுகடுத்தாள்.

பாக்கியம் கையைப் பிசைந்த வண்ணம் "அம்மா, நான் என்ன செய்வேனுங்க. அவுருக்கு ஜுரம் விடலைங்க. கூலி வேலைக்கு போனா ரெண்டு காசு சம்பாதிச்சுண்டு வருவாங்க? சின்ன கொளந்தையை வாந்திபேதி புடுங்கிதிங்குதுங்க. வேறெடத்துலெ வேலை செஞ்சுகிட்டுருந்த என் மவளுக்கும் முறை ஜுரம் பிடுங்கிதிங்குது. வைத்திய அய்யாவை அளச்சுவர பணம் இல்லாமல் திண்டாடரேங்க. நீங்கதான் என் குடும்பத்து தெய்வம்மா. ரெண்டு ரூவாயானு கொடுத்து உதவுங்கோம்மா" என்று கெஞ்சினாள்.

கமலாம்பாள் "ஆமாண்டி, அம்மா! பாசாங்குக்காரி. உன்போல் அநேகரை நான் கண்டிருக்கிறேண்டி. அய்யோ பாவம் என்று போன மாதம் முன் பணம் கொடுத்தேனே அதைக்கூட திருப்பிக் கொடுக்க வழியைக் காணோம். போதாக்குறைக்கு தினம் ஒரு பொய்யை சொல்லிக்கொண்டு வந்து நிற்கிறாயா? ஒரு தம்படிகூட கொடுக்க முடியாது." என்று கூறிய வண்ணம் பாய் மீதிருந்து எழுந்து புடவையை உதறி விட்டுக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

பாக்கியம் உண்மையில் பொய் சொல்பவளல்ல. எனவே அவளை இப்பேச்சு அம்புபோல் அடித்தது. அவள் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அவளது பரிதாப நிலைமையை கண்டறிந்த பரிமளா தாயாரை பின் தொடர்ந்து சென்று "அம்மா அம்மா, பாவம் பாக்கியம் நமக்கு எவ்வளவு உழைத்து வேலை செய்கிறாள். அவளது கஷ்ட காலத்தில் நாம் உதவ வேண்டாமா? இரண்டு ரூபாய் இல்லாவிட்டால் ஒரு ரூபாயாவது கொடுத்துப் போகச் சொல்லேன் ...." என்று சொல்லு முன், கமலாம்பாள் குறுக்கிட்டு "போடீ உன் வேலையை பார்க்க. வீட்டுத் தொல்லை உனக்கென்னத்திற்கு? எனக்கு தெரியும் இந்தப் படைகளின் புத்தி. டாக்கீக்கு போகநாழியாய் விட்டது. புறப்பட தயாராக இரு" என்று கூறிய வண்ணம் முகம் கழுவிக் கொள்வதற்கு வென்னீர் அறைக்குச் சென்றுவிட்டாள்.

பரிமளா ஒன்றும் தோன்றாதவளாய், துக்கத்துடன் தனது அறைக்குச்சென்று

கதவை தாளிட்டுக்கொண்டு, நாற்காலியில் ஆழ்ந்த யோஜனையில் அமர்ந்தனள்.

வேலைக்காரி பாக்கியம் வெகுநேரம் தாழ்வாரத்தில் காத்திருந்து யஜமானியம்மாளின் தயவைப் பெறுமல் நிராசையாய் வீடு திரும்பினள். வழியில் தான் வேலை செய்யும் மற்று மிரண்டு வீடுகளிலும் உதவி நாடினுளாகிலும் பலனேற்படவில்லை.

சற்று நேரத்திற் கெல்லாம் கமலாம்பாள் பரிமளாவைக் கூப்பிடவே பரிமளா டாக்கீக்கு வர மறுத்து விட்டாள். ஆசையால் கமலாம்பாள் மட்டும் தனது நேசிகள் இரண்டு பேர்களுடன் டாக்கிக்கு சென்று விட்டாள்.

பாக்கியம் வீடுவீடாக அலைந்து கையில் ஒரு தம்பிடியுமின்றி துக்கத்துடன் வீட்டை அடையவே அவள் கணவன் கந்தசாமி ஜுரவேகத்தில் பிதற்றிக் கொண்டிருப்பதைக் கண்டனள். சிறு குழந்தை மத்தியானமெல்லாம் மிகவும் வயிற்றுப்போக்கு உண்டானதினல் துவண்டு, சுருண்டு அக்காள் மடிமீது உணர்வற்று படுத்திருந்தது. முறை ஜுரத்தினல் பிடிக்கப்பட்ட குப்பாயி உதறலுடன் குழந்தையை மடிமீது உட்காரவைத்துக்கொண்டு உட்காரமாட்டாமல் உட்கார்ந்திருக்கும் பரிதாப நிலைமையைக் காண, தாயின் உள்ளம் பதரிற்று. க்ஷணம் பாக்கியம் கைக்குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டு கட்டி அணைத்துக்கொண்டு பெண்ணை ஒரு கந்தல் பாய்மீது படுக்கவைத்தாள்.

பின்பு தழதழத்த குரலில் "குப்பம்மா, அண்ணுச்சிக்கு ஏதாச்சி தந்தயாமா?" என்று வினவினள்.

குப்பு "ஆமாம், ஆத்தா, லவலேசம் நொய் கஞ்சி வெச்சு தந்தேனுங்க. பாவம்! அண்ணுச்சிக்கு அதகூட குடிக்க முடியலீங்க. மெத்த வேதனே படுது. ஆத்தா, ஆ, குளுருது, அந்த கந்தலையாங் காட்டி போத்துடு ஆத்தா" என்று பரிதவித்தனள்.

அந்த கந்தலே போர்த்தியவண்ணம் பாக்கியம் "வைத்தியனுங் காட்டி கூட்டி வரணும்னு பாத்தேன். காசு இல்லாமே எவன் வரான்? தம்பிடி காசில்லே கையிலே..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே பக்கத்து வீட்டு பொம்மையன் பையன் மொட்டையன் ஓடிவந்து "டீ, குப்பாயி, அதாரோ அய்யா வந்துச்சு. இந்த போர்வையை ஒனக்கு கொடுன்னு சொல்லிபிட்டு போனுங்க" என்று ஒரு நல்ல சால்வையை குப்பாயியிடம் எறிந்துவிட்டுச் சென்முன்.

குப்பாயி அதைப் போர்த்திக்கொண்டு "அந்த அய்யாவும், அம்மாவும் சுவமா இருக்கணும். ஆத்தா, அது ஆரோ ஒரு அய்யாவும், சின்ன அம்மாங்களுமா வந்துட்டு போனுங்க. அந்த அய்யா என்னை, அண்ணுச்சியே எல்லாம் சோதிச்சு பாத்தாரு. அப்பாலே அண்ணுச்சிக்கு ஊசி குத்திபிட்டு என் வாயிலே ஒரு கசப்பு குளிகெயாட்டமா போட்டு முழுங்க சொல்லி போனுங்க. கொளந்தைக்கும், அண்ணுச்சிக்கும் இந்த மாவை சுடுதண்ணிலே கரச்சு மாத்திரம் ஆகாரம் கொடுன்னு சொல்லிபிட்டு போனுங்க, ரெண்டு ரூவாய் கூட கொடுத்தாங்க" என்று இடுப்பிலிருந்து இரண்டு ரூபாய்களை எடுத்து கொடுத்தாள். அவள் பக்கத்தில் புத்த புதிதான ஒரு மருந்து புட்டி வைத்திருந்தது. இந்த விஷயத்தை செவியுற்ற பாக்கியம் பரமாச்சரியத்துடனும், ஆனந்தத்துடனும் சாக்ஷாத் பகவானே தனது எளிய இல்லத்திற்கு வந்து போயிருக்கவேண்டுமென்று எண்ணி அகமகிழ்ந்தனள்.

பாக்கியம் வேலைக்கு வராமல் ஐந்து நாட்கள் கடந்துவிட்டது. தினம் ஒருமுறை பரிமளா தாயாரிடம் "அம்மா, பாக்கியம் வேலைக்கு வரவே இல்லையே. அவள் வீட்டில் காயலா எப்படி இருக்கோ, என்னமோ, சேவகன் சொன்னை முத்தையாவது அனுப்பித்து விஜாரித்து வரச் சொல்லலாமா?" என்பாள்.

அதற்கு கமலாம்பாள் "போடீ போ வேலையத்தவளே. அவள் வராவிட்டால் என்ன பிரமாதம். நான் வேறொருத்

தியை வேலைக்கு அமர்த்தியாய் விட்டது. ஊர் விஜாரமெல்லாம் உனக்கேன். உன்பாட்டில் உன் வேலையைப் பார்" என்று வெடுக்கென்று ஒரு பதில் சொல்லி அதட்டிவிடுவாள். தனது தாயார் அவ்வேழை மீது இவ்வித அலக்ஷியத்துடன் பேசும் பொழுதெல்லாம் பரிமளாவின் மனம் தீயிலிட்ட மெழுகு போல் உருகும். தான் இனிமேல் ஏழை எளியவர்களின் சேவையிலேயே தன் வாழ்நாளை கழிக்கப்போவதாக கங்கணம் கட்டிக்கொண்டாள். தான் இன்டர்மீடியட் பரிக்ஷையில் முதன்மையாக தேறினாளாகிலும் மேல் படிப்பிற்கு சென்னைக்குச் சென்று க்வீன்மேரிஸ் கலாசாலையை சேருவதைவிட அம்மாஞ்சி சிவசுப்ரமணியத்துடன்கூடி ஹரிஜன சேவையும், கிராம சேவையும், செய்வதில் ஈடுபடுவதே பதின் மடங்கு மேன்மையான காரியமென்று பரிமளா உணர்ந்தாள். இவ்விதம் அவ் வுத்தமி தூய்மையான கதராடை உடுத்தி, அம்மாஞ்சியுடன் கூடி ஹரிஜன சேரிகளுக்கும், குடியானவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கும் சென்று அவர்களது கஷ்ட சுகங்களை விசாரித்து, அவர்களுக்கு பலவித உதவி புரிந்து, வீடுகளையும், சேரியையும், பரிசுத்தமாக வைக்கவேண்டிய வழியை அவர்களுக்கு உபதேசித்தாள். இருவருமாக அந்த எளிய சகோதர சகோதரிகளுக்கு கந்தையாகிலும் நித்தியம் துவைத்துக் கட்டி, நித்தியம் குளிப்பாட்டி திலகமிட்டு, தலை சீவிவிட்டு, பரிசுத்தமான உள்ளத்துடன் முதன்முதல் பரமாத்மாவை தொழுத பின்னரே மற்ற வேலைகளை செய்ய துவக்கவேண்டுமென்று உபதேசித்தனர். அவ்வெளிய குழந்தைகளுக்கு பள்ளிக்கூடம் கூட்டி பாடம் கற்பித்துவந்தனர். இவ்விதம் சேரிகளை சீர்திருத்தி தீனஜன சேவையிலேயே ஈடுபட்டு வந்த நம் பரிமளாவையும், அவளுக்கு துணையாக இருந்த அவளது அம்மாஞ்சியையும் கமலாம்பாளிற்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஏற்கனவே பொதுஜன சேவையிலீடுபட்டிருக்கும் பரிமளாவின் தகப்பனருக்கு புத்திரியின் சமூக ஊழியத்தைக் கண்டு பரம திருப்தியுண்டாயிற்று.

மருமான் சிவசுப்ரமணியனால் குழந்தை சீரழிந்து போகிறாளென்றும் அவன் எம்.பி.பீ.எஸ். பட்டம் பெற்று சேலம் வந்து ஷாப்பு வைத்து வாரினது போதுமென்றும், ஷாப்பில் அரைவாசி மருந்துகளை ஏழைகளுக்கு விற்காமல் தர்மத்திற்கு வினியோகம் செய்து வீணாக்கி விடுகிறானென்றும், பையனை இப்பொழுதே கவனித்து, கண்டித்து உடனே ஒரு சர்க்கார் உத்தியோகத்தில் அமர்த்தினால்தான் பையன் உருப்படுவானென்றும், கமலாம்பாள் தனது தமயனுக்கொரு நீண்ட கடிதம் எழுதினாள்.

டாக்டர் சிவசுப்ரமணியம் எம். பி. பீ.எஸ். சேலம் வந்து ஐந்தாறு மாதங்களிலேயே அவனது கைவாசியாலும், பொறுமை, சாந்தம் தயா . தாக்ஷிண்ய சுகுணங்களினாலும் பொது ஜனங்களை ஆகர்ஷித்துவிட்டானே தவிர, கமலாம்பாள் எண்ணியபடி அவனுக்கு நஷ்டமொன்றும் ஏற்படவில்லை. ஏழைகளும் பணக்காரர்களுமாக பலவித ஜாதியினரும் அவனிடம் வைத்தியம் செய்து கொள்வதற்காக அவன் ஷாப்பில் சதா காலமும் திரள் திரளாக வந்து கூடுவார்கள்.

ஒரு நாள் மாலை பொழுது. ஒரு பெரிய கூடையுடன் பாக்கியம் கமலாம்பாள் வீட்டிற்கு வந்து "சின்னம்மாங்க இருக்காங்களா?" என்று வின்வினாள்.

கமலம் சிடு சிடுத்த முகத்துடன் "அவள் எதற்கடீ உனக்கு? இங்கு என்னத்திற்கு வந்தாய்? உனக்கு இவ்விடம் வேலை கொடுப்பார் ஒத்தரும் இல்லை. போ, போ" என்று அதட்டினாள். இவளைக் கண்டவுடன் கமலாம்பாளிற்கு இவள் அன்று செய்த நீலித்தனத்தினாலல்லவா தன் பெண் இவ்விதம் மேல்படிப்பை நிறுத்திவிட்டு அர்த்தமில்லாமல் அலைகிறாளென்று அவள் மேல் வெறுப்பேர்ப்பட்டது.

அதற்குள் பரிமளாவும், சிவசுப்ரமணியனும் "என்ன பாக்கியம், சௌக்

கியந்தானே?" என்று விசாரித்துக் கொண்டே அவ்விடம் பிரவேசித்தனர். உடனே பாக்கியம், கூடையிலிருந்து ஒரு தாம்பாளத்தை எடுத்து அதில் இரண்டு சீப்பு வாழைப்பழம், நான்கு இளநீர்கள், ஒரு டஜன் கிச்சிலிப் பழம், பாதாமி, கற்கண்டு, வெற்றிலைப் பாக்கு, இரண்டு புஷ்ப ஹாரங்கள் அனைத்தையும் எடுத்துவைத்து "என் தெய்வங்களே, எங்க குடும்பத்தை காத்த ஆண்டவன்களே" என்று பக்தியுடன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தனள். கமலாம்பாள் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு நின்றனள்.

மற்றிருவரும் பாக்கியத்தைப் பார்த்து "போதும், போதும் எழுந்திரு. நாங்கள் என்னத்தை செய்துவிட்டோம், எல்லாம் ஈசன் அருள்" என்று ஒருமிக்க மொழிந்தாள். கமலாம்பாள் பிரமித்துப் போய் "என்னம்மா பரிமளா இது. எனக்கொன்றும் புரியவில்லையே!" என்று மெதுவாக வினவினள்.

பரிமளா "அம்மா, அன்றைக்கு நீ பாக்கியத்தை, அதட்டி அனுப்பிவிட்டு சினிமாவிற்குச்சென்ற பின், அவளுக்கு எப்படியாவது உதவிசெய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. நீசென்ற பின் நான் நேராக அம்மாஞ்சியின் மருந்து ஷாப்புக்குச் சென்று அவரது உதவியை நாடினேன். சொள்ளைமுத்தினிடம் பாக்கியம் வீட்டின் அடையாளத்தைக் கேட்டு தெரிந்துக்கொண்டு அவள் வீட்டிற்குச் சென்றோம். பாக்கியம் இன்னும் வீட்டிற்கு வந்திருக்கவில்லை. அவள் வீட்டார் எங்களை முன்பு பார்த்திருக்கவில்லையாதலால் நாங்கள் இன்னாரென்று அவர்களிடம் சொல்லவில்லை. அத்தான் ரோகியை பரிக்ஷை செய்து மருந்து கொடுத்தார். அன்று அத்தான் இவள் புருஷனுக்கு இன்ஜெக்ஷன் கொடுத்திராவிட்டால் அவன் பிழைத்திருக்கவே மாட்டான். அவ்வளவு மோசமாக விருந்தது அவன் தேகஸ்திதி. இவ்விதமே நாங்கள் இன்னாரென்று தெரிவிக்காமல் பாக்கியம் வீட்டிலில்லாத சமயம் பார்த்து அவள் வீட்டிற்கு சென்று சிகிச்சை செய்து வந்தோம். சொள்ளைமுத்திற்குக் கூட இந்த விஷயத்தை ரகசியமாக வைத்திரு என்று சொல்லி இருந்தோம்?" என்று புன்னகை தவழ உரைத்தாள்.

பாக்கியம் இளித்த வண்ணம் "நேத்து சொள்ளைமுத்துதான் சொல்லிச்சு. அவனை கோவிச்சுக்காதேங்கோம்மா தாயி" என்றாள்.

கமலத்தைப் பார்த்து "அம்மா, மகாலட்சுமி, இந்த அருமை கொளந்தையை பெத்த உன் வவுறு ஜில்லுனு இருக்கணும். இந்த அய்யாவை மருமகனுக்கிகிட்டு சுவமா இரு. என் ஆண்டவன்களுக்கு இன்னுமொரு கும்பிடுபோடுகிறேன், எய் குப்பாயி! அண்ணுச்சியையும் அழைத்துவா!" என்று ஒரு கூப்பாடு போட்டுவிட்டு மருபடியும் அவ்விரு இளைஞர்களுக்கும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தாள் பாக்கியம். மறைவிலிருந்த அவள் கணவனும் குழந்தைகளும் வந்து அவ்விதமே நமஸ்கரித்தனர். கமலாம்பாள் உடனே தட்டிலிருந்த புஷ்ப ஹாரங்களிரண்டையும் எடுத்து தனது செல்விக்கும், மாப்பிள்ளையாகப் போகிற மருமானுக்கும் அணிவித்து மகிழ்ந்தனள். அப்பொழுது அவ்விரு பொது நல ஊழியர்களும் சாக்ஷாத் தெய்வங்களாகவே விளங்கினார்கள்.

ராஜுவும் ரோஜாவும்

(ரா. வே. ரா.)

கமலாவுக்கு ராஜுவும், தனது வீடு ஒன்றும் தான் இவ்வுலகத்திலிருந்த ஆஸ்தி. அவள் வீடு மாம்பலத்திலிருந்தது. அவள் தன் ஒரே மகனை ராஜுவுடன் அவ்வீட்டில் வசித்து வந்தாள். அவள் ஒரு பால்ய விதவை. அவள் தனக்குத் தேவையான இடங்களைதான் வைத்துக்கொண்டு, மீதியுள்ள இடங்களைக் குடிக்கூலிக்கு விட்டு வந்தாள். குடிக்கூலிக்கு விட்டு வந்ததில் அவளுக்கு மாதம் இருபது ரூபாய் கிடைத்தது. அவள் அப்பணத்தைக் கொண்டு ஜீவனம் நடத்தி வந்தாள். அவள் தன் கணவனை இழந்தது முதல் இவ்வுலத்தில் ஜீவித்திருப்பதற்கே விரும்பவில்லை. அவள் தன் ஒரே மகன் ராஜுவுக்காகத்தான் ஜீவித்து வந்தாள் என்றே சொல்ல வேண்டும். அப்பொழுது ராஜுவுக்கு வயது ஏழு. அவன் பள்ளிக்கூடத்தில் மூன்றும் வகுப்பில் படித்து வந்தான். ராஜு வகுப்பில் முதலாவதாக இருந்து நன்கு படித்து வந்தான். உபாத்தியாயர்களின் நன்மதிப்பை விரைவில் பெற்றுக் கொண்டான்.

ராஜுவின் தாயார் அவனை மிகவும் அன்புடனும் ஜாக்கிரதையுடனும் வளர்த்து வந்தாள். ராஜுவுக்குச் செடிகள் வைத்து வளர்ப்பதில் ஆசை உண்டு; ரோஜாச் செடி வளர்ப்பதில் தான் மிகவும் ஆசை..... அவன் புதிதாக ஒரு பூந்தொட்டி வாங்கி, அதில் ஒரு ரோஜாச் செடியை நட்டுத் தன் வீட்டிலுள்ள மேல் மாடியில் வைத்து வளர்த்து வந்தான். ரோஜாச் செடியும் மிகச் செழுமையாக வளர்ந்தது. அவனது தாயார் அவனை எவ்வளவு அன்புடன் வளர்த்து வந்தாளோ அவ்வளவு அன்புடன் அவனும் தனது ரோஜாச் செடியை வளர்த்து வந்தான்.

நாட்கள் சென்றன. ரோஜாச் செடி மொட்டுவிட ஆரம்பித்தது; பூக்கவும் ஆரம்பித்தது. ராஜு, பூக்களைப் பறித்து முகர்ந்து பார்ப்பதிலும், அவற்றின் இதழ்களைத் தின்பதிலும் அடைந்த ஆனந்தத்தை அளவிடமுடியாது? ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் அவன் வகுப்பில் தாவர சாஸ்திரம் நடத்தும்பொழுது செடிகளுக்கும் உயிர் இருக்கிறது என்று உபாத்தியாயர் சொன்னர். அன்று முதல் ராஜு மேலும் அதிக அன்புடனும், ஜாக்கிரதையுடனும் அந்த ரோஜாச் செடியைவளர்த்து வந்தான். அவனது தாயாரும் அவ்விஷயத்தில் அவனுக்கு ஒத்தாசை செய்து வந்தாள்.

ஒரு நாள் சாயங்காலம் அவன், பள்ளிக்கூடத்திலிருந்து சீக்கிரமாகவே வீட்டிற்கு வந்துவிட்டான்.

அன்று அவன் முகம் தெளிவற்று விளங்கியது. அவன் வந்தவுடன் காப்பி குடித்துவிட்டு, நேரே மாடிக்குச் சென்று ரோஜாச் செடிக்கு ஒரு சொம்புத் தண்ணீர் ஊற்றிவிட்டு வந்தான். அந்தோ! அன்றே அவன் கடைசி முறையாகத் தன் செடிக்குத் தண்ணீர் ஊற்றினன். பிறகு கீழே இறங்கி வந்து, தன் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டான். தான் தலைவலியால் வருந்துவதாய்த் தன் தாயிடம் தெரிவித்தான்.

தலைவலி மறுநாள் ஜுரமாயிற்று. டாக்டர் வந்து அவனுக்கு மருந்து கொடுத்தார். ஆயினும் என்ன பயன்? அவன் அன்று சாயந்திரமே தன் சுய நினைவிழந்தான்.

அவன், "அம்மா! ரோஜாச் செடிக்குக்கூட உயிர் இருக்கா? அதுகூடச் சாப்பிடுமா? நம் வீட்டிலே வெள்ளை ரோஜாச் செடி வளர்க்கலாமா?" என்றெல்லாம் ரோஜாச் செடியைப் பற்றிய ஞாபகத்துடன் பேத்தினன். அவன் தாயார் எப்பொழுதும் அவன் அருகிலேயே உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவள் முகம் பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாய் இருந்தது. ராஜுவுக்கு ஜுரமாய் இருந்ததால் அவன் தாயார் கமலாவே ரோஜாச் செடிக்குத் தண்ணீர் ஊற்றி வந்தாள். ஆயினும் ரோஜாச் செடி வழக்கம்போல் அதிகமாய்ப் பூக்கவில்லை. 'ராஜுவின் கையினல், நான் தண்ணீர் வாங்கி அருந்த முடியவில்லையே!' என்ற ஏக்கத்தினல் தான் அது அதிகமாய்ப் பூக்கவில்லையோ ஆலும்!

ராஜுவுக்கு ஜுரம் நாளுக்கு நாள் அதிகரித்தது. அவன் தனக்கு ஜுரம் வந்த நான்கு நாட்களுக்குப் பிறகு விண்ணுலகை அடைந்தான். அவன் இறந்த பிறகு அவ்வீடு சோபையற்று விளங்கியது. தனது மகனை இழந்த துக்கத்தில் தாய் ராஜுவின் ஆருயிர் நண்பன் ரோஜாச் செடியை மறந்தே போனள். அவள் தினமும் அதற்குத் தண்ணீர் ஊற்ற மறந்து போனள். தண்ணீர் கிடைக்காததால் அச்செடி வாடி வதங்கி விரைவில் பட்டுப்போயிற்று. அச்செடி தன் நண்பன் ராஜுவை இழந்ததினல் துக்கம் தாங்கமாட்டாது தானும் இறந்தது போலும்!

ராஜுவை இழந்த சில நாட்களுக்குப் பின் ஒரு நாள், ராஜுவின் தாயார் மாடிக்குச் சென்றிருந்தாள். அங்கு அவள், ரோஜாச்செடி பட்டுப்போய் அதன் காய்ந்து கருகிய சில கிளைகள் இடி விழுந்த பனைமரம்போல் மொட்டையாக நிற்பதைக் கண்டாள். அதைக் கண்டதும் அவள் கண்களினின்றும் நீர்த்துளிகள் விழுந்தன.

அவள் மறுநாளே தனது மகன் ஞாபகார்த்தமாக ஒரு புதிய ரோஜாச்செடி வாங்கி, அதனை அதே பூந்தொட்டியில் நட்டு மிகவும் ஜாக்கிரதையுடன் வளர்த்து வர ஆரம்பித்தாள்.

பாரத மணி

சந்தா

உள்நாடு	ரூ. 4	(தபால் செலவு உள்பட)
வெளிநாடு	ரூ. 6	(தபால் செலவு உள்பட)

தனிப்பிரதி விலை **1** அணா.

விளம்பரம்

இந்தியாவில் செய்யப்பட்ட சுதேசி சாமான்கள் விளம்பரப் படுத்த விசேஷ வசதி அளித்திருக்கிறது. $\frac{1}{8}$ பக்கம் (பத்து வரி) விளம்பரங்கள் ஒரு தடவைக்கு ரூ. 2 வீதமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நீடித்த ஒப்பந்த விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்.

மயிர் உதிர்வதை உடனே
நிறுத்தாவிட்டால் வழுக்கைத் தலைதான்

இன்றே
கெஸ்ரின்
வாங்கி, உங்கள் கேசத்தை அழகு படுத்துங்கள்
ஒரு புட்டி 12 அணா
எல்லா ஷாப்பிலும் கிடைக்கும்
விக்டோரியா டிபோ
வடக்கு மாடவீதி, மைலாப்பூர்
சென்னை.